# சைவ போதினி



நான்காம் வகுப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saravanapavan.
Goanipalam

உ
சிவமயம்

# சைவ போதினி

## நான்காம் வகுப்பு

### சான்றிதழ்

1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும், இரு பாஷை பாடசாலைகளுக்கும் ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19 (A)-ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப்புத்தகம் நான்காம் வகுப்பில் சைவசமயபாடம் படிப்பிப்பதற்கு ஒரு பாடப் புத்தகமாகப் பாடசாலைகளில் உபயோகிப்பதற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இல: ஈபீபி/சி/456 24-10-66.

1979

2.00

உரிமை பெற்றது] [விலை: ரூபா 1-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எமது சபையார் நடாத்தும் அகில இலங்கைச் சைவ சமய பாடப்பரீட்சைக்குரிய அரசினர் பாடத்திட்டத்துக்குச் சிறந்த முறையில் உதவக்கூடிய வழியில், "சைவபோதினி" தொகுக்கப்பட்டுள்ளது. சைவமாணக்க, மாணக்கியர் தத்தம் தகுதிகட்கு ஏற்றவாறு, இலகுவிற் படித்துக்கிரகிக் கக்கூடிய முறையில், இப்புதிய வெளியீடு பிரசுரிக்கப்பட்டுள் ளது. இந்நூல் இரண்டாம் வகுப்புச் சிறுவர்களுக்குப் பயன் படக்கூடிய சிறந்த பதிப்பாக அச்சிடப்பட்டிருக் கின்றது. சைவசமயத்தின் தத்துவார்த்த விளக்கத்தை அடிப்படை யாகக் கொண்ட பாடங்கள் நாயன்மார் சரித்திரங்கள், புராணக்கதைகள். சைவத் திருமுறைகள் இப்பபதிப்பில் இலகுவாகப் போதிக்கப்படக்கூடிய முறையில் அரசினர் பாடத்திட்டத்தைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன.

கடந்த ஐம்பது வருடங்களாக இச்சபையாரால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டுவரும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சையும், இப்பரீட்சையின் அடிப்படைக் காரணமாகிய சைவசமயப் போதனையும் மேன்மேலும் விருத்தியடைந்து வருவதற்கு "சைவபோதினி" ஒரு பற்றுக்கோடாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

"குற்றங் களைந்து குணமளைந்து கொள்ளுதல், கற்றறிந்த மாந்தர் கடன்" என்பதற்கமைய, இப்பதிப்பிற் குறைகள், பிழைகள் இருப்பின் அவற்றை எமக்கு அறிவிக்குமாறு அன்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்நூற்றொகுதியில் உள்ள பாடங்களை ஒழுங்காகக் கற்கும் மாணவருலகம் நன்மைபெறும் என்பதில் யாதுமோர் ஐயுறவில்லை.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

34, விவேகாநந்த மேடு,
கொழும்பு - 13
17-1-79

கொழும்பு
விவேகாநந்த சபையார்.

14 ஆம் பதிப்பு: ஜனவரி 1979: 15,000 பிரதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | செப்ரெம்பர் | 1960 |
| இரண்டாம் பதிப்பு | மார்ச் | 1961 |
| மூன்றும் பதிப்பு | நவம்பர் | 1961 |
| நான்காம் பதிப்பு | மார்ச் | 1964 |
| ஐந்தாம் பதிப்பு | பெப்ரவரி | 1967 |
| ஆறும் பதிப்பு | நவம்பர் | 1969 |
| ஏழாம் பதிப்பு | மே | 1970 |
| எட்டாம் பதிப்பு | ஜனவரி | 1971 |
| ஒன்பதாம் பதிப்பு | திசெம்பர் | 1971 |
| பத்தாம் பதிப்பு | மார்ச் | 1972 |
| பதினொராம் பதிப்பு | திசெம்பர் | 1974 |
| பன்னிரண்டாம் பதிப்பு | திசெம்பர் | 1976 |
| பதின்மூன்றும் பதிப்பு | மார்ச் | 1978 |
| பதினான்காம் பதிப்பு | ஜனவரி | 1979 |

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை - யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திருஞான சம்பந்தர் தேவாரம் | 1 |
| 2. | சைவ சமயம் | 4 |
| 3. | திருக்கேதீச்சரம் | 6 |
| 4. | அகத்தியரும் பிள்ளையாரும் | 9 |
| 5. | திருநாவுக்கரசர் தேவாரம் | 12 |
| 6. | திருநீறு | 14 |
| 7. | திருக்கோணேச்சரம் | 17 |
| 8. | முருகக்கடவுளும் ஔவையாரும் | 21 |
| 9. | சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் | 24 |
| 10. | நித்தியகருமம் | 28 |
| 11. | கதிர்காமம் | 31 |
| 12. | சம்பந்தர் ஞானப்பாலுண்டது | 35 |
| 13. | மாணிக்கவாசக சுவாமிகள் தேவாரம் | 3 |
| 14. | கோயிலுக்குச் செல்லுதல் | 2 |
| 15. | மாவிட்டபுரம் | 45 |
| 16. | அப்பர் சூலை நோய் தீர்ந்தது | 49 |
| 17. | பெரியபுராணம் | 52 |
| 18. | கோயில்களைச் சுத்தஞ்செய்தல் | 54 |
| 19. | சுந்தரைத் தடுத்தாட்கொண்டமை | 57 |
| 20. | அருணகிரிநாதர் திருப்புகழ் | 61 |
| 21. | பூந்தோட்டம் | 64 |
| 22. | செம்மனச்செல்வியார் | 67 |
| 23. | திருமந்திரம் | 71 |
| 24. | மூதுரை | 72 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# சைவ போதினி

## நான்காம் வகுப்பு



### 1-ஆம் பாடம்

# திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்

(1)

**திருவலிவலம்**

திருவிராகம் — பண் — வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

திருச்சிற்றம்பலம்

இதன் பொருள்:— *மிக்க கொடையே வடிவமாகவுடைய சான்றோர் வாழ்கின்ற திருவலிவலம் என்னும் பதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், தமது சத்தியாகிய உமையம்மை*

யார் பெண் யானை வடிவத்தைக் கொள்ள, தாம் ஆண்யானையின் வடிவத்தைக்கொண்டு, தமது பாதங்களை வழிபடும் அடியாரது துன்பங்களை நீக்கும் தன்மையுடையவராகிய விநாயகக் கடவுள் உற்பத்தியாவதற்குத் திருவருள்புரிந்தார்.

குறிப்பு:— பிடி - பெண் யானை. கரி - ஆண் யானை. கடி - நீக்கும்.

( 2 )

திருப்பழனம்

பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேத மோதிவெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனநின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழனநகராரே.

திருச்சிற்றம்பலம்

இதன் பொருள் :— திருப்பழனம் என்னும் தலத்திலே எழுந்தருளியுள்ள சிவபெருமான் வேதங்களைஓதிக்கொண்டும், பூணூலை மார்பிலே அணிந்துகொண்டும், வெண்மையான எருது வாகனத்திலே ஏறிக்கொண்டும், புலித்தோலை ஆடையாக உடுத்துக்கொண்டும், பூதகணங்கள் சூழ வருவார். அவர், தலைவனே என்றும், ஆடை அற்றவனே என்றும், நம்பிரானேயென்றும் சொல்லி வணங்கும் அடியார்களது பாவங்களைத் தீர்த்தருளுவார்.

குறிப்பு:— நாதா - தலைவனே. நக்கா - ஆடை அற்றவனே (எங்கும் நிறைந்தவனே). நம்பா - நம்புதற்குரிவனே.

( 3 )

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் — கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக வரலாறு:— திருஞானசம்பந்தர் திருப்பெருமண நல்லூர் என்னுந் திருத்தலத்திலே திருமணஞ் செய்து கொண்டபின் அங்கே எழுந்தருளியுள்ள இறைவனை நோக்கி இல்லறத்தினின்றும் தம்மைக் காத்துத் திருவடியிற் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டினுர். அதற்கிசைய இறைவன் அங்கே ஒரு சோதியை உண்டாக்கி அதனுள்ளே, விவாகத்தைக் காண வந்த அனைவரையும் புகச் செய்தார். அப்போ திருஞானசம்பந்தர், யாவருக்கும் மெய்ந் நெறியாவது நமசிவாய என்னும் மந்திரமே என்னும் கருத்தைக் கொண்ட இப்பதிகத்தை அருளிச்செய்து, எல்லாருடனும் சோதியினுட் கலந்து சிவசாயுச்சிய மெய்தினுர்.

இதன் பொருள்:— அன்பு பெருகி மனம் கசிந்து கண்ணீர் நிரம்பச் சொரிந்து பத்தியுடன் ஓதுபவர்களை நல்வழியில் செலுத்துவதும், நான்கு வேதங்களிலும் கூறப்படுகின்ற மெய்ப்பொருளாவது. இறைவன் திருநாமமாகிய "நமச்சிவாய" என்கின்ற திருவைந்தெழுத்தேயாகும்.

(4)

## திருவாலவாய்

பண் — காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு:— மதுரையிலே பாண்டிய அரசனின் வெப்புநோயை நீக்குதற் பொருட்டு இப்பதிகத்தைப் பாடி விபூதியை இட்டார் திருஞானசம்பந்தர். உடனே வெப்பு நோய் நீங்கியது.

இதன் பொருள்:— சிவந்த பவளம் போன்ற வாயையுடைய உமாதேவியாரைப் பாகத்திலே கொண்ட திருவாலவாய்ப்பெருமானின் சின்னமாகவுள்ள திருநீறு நினைப்பவரைக் காப்பது; புகழ்ந்து வணங்கப்படுவது; மோட்சமடைவதற்கு உபாயமாகவுள்ளது! சமயத்தின் அடையாளமாய் உள்ளது.

குறிப்பு:— சுந்தரம் - அழகு; தந்திரம் - உபாயம்; துவர் - பவளம்; ஆலவாய் - மதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ஆம் பாடம்

# சைவ சமயம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவ சமயமாகும். இது மிகவும் பழைமை வாய்ந்தது. உலகம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே சிவவழிபாடும் தோன்றியதெனலாம்.

சைவ சமயம் என்பதற்குச் சிவத்தை அடையச் செய்யும் சமயம் என்பது கருத்தாகும். சிவம் என்பது முழுமுதற் கடவுள்; அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர்; உருவமற்றவர்; எமது மனத்துக்கு எட்டாதவர்; ஆனல், திருவருட் செயல்களினுல் மாத்ரம் நாம் அவரை உணருகிருேம்.

உமாதேவியார் சிவபெருமானுடைய அருட் சத்தி என்று சொல்லப்படுவார். இவ்வுலகத்திலே எங்களை அதிக அன்பாய்க் காத்து வருபவர் எமது தாயாரே. அதுபோலவே எங்களைத் தமது அன்பினுலே ஈடேறச் செய்பவர் சத்தியாகிய உமாதேவியாரே. இந்தச் சத்தியைக் கொண்டே சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் புரிகிருர். இத் தொழில்களை முறையே பிரமா, விஷ்ணு உருத்திரன், சதாசிவன், மகேசுவரன் என்னும் திருமேனிகளில் நின்று புரிகிருர்.

சிவபெருமான் தம்மை வழிபடும் அடியவர்களுக்கு முத்தியின்பமாகிய மோட்சத்தைக் கொடுக்கிருர். எனவே அவரை வழிபடும் மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தைக் கூறுகின்ற சைவசமயத்தை நாம் கடைப் பிடித்து ஒழுகவேண்டும்.

சைவசமயக் கொள்கைகள் பல நீதிகளை அடக்கியனவாகவும், நல்வாழ்க்கைக்கு வழிகாட்டு வனவாகவும் உள்ளன. பஞ்சமா பாதகங்களையும் ஒழிக்க வேண்டும் என்று சைவசமயமே எமக்கு எடுத்துக் காட்டுகிறது. உயிர்களைக் கொல்லுதல் பிறர் பொருளை அபகரித்தல், மது அருந்துதல், புலாலுண்ணல், பொய் பேசுதல் ஆகியவை பாவச் செய்கைகளாகுமென்றும் அவற்றைச் செய்தவர் நரகத்துள் வீழ்ந்து துன்பப்படுவர் என்றும் சைவ சமய நூல்கள் சொல்லுகின்றன. கடவுள் வழிபாடு, தருமம் செய்தல், உண்மை பேசுதல், சீவகாருண் யம் முதலிய நல்வினைகளைச் செய்தோர் மூத்தியின் பத்தை அடைவர் என்றும் எடுத்துக்காட்டுகின்றன.

ஆதலால், பிள்ளைகளே! கடவுளைப் பற்றியும், கடவுள் வழிபாட்டைப் பற்றியும், பாவ புண்ணியங் களைப் பற்றியும் விளக்கமாகச் சொல்லும் மெய்ச் சமயமாகிய சைவ சமயத்தைக் கைக்கொண்டு சரியான முறையில் ஒழுகுவீர்களேயானல், முத்தி யின்பத்துக் கேதுவான இறைவன் பாதங்களை அடைவீர்கள் என்பது திண்ணம்.

## வினுக்கள்

(1) சைவ சமயம் என்பதன் பொருள் யாது?

(2) ஐந்தொழில்கள் எவை?

(3) சத்தி என்பது யாரைக் குறிக்கிறது?

(4) பஞ்சமா பாதகங்கள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) கீறிட்ட இடங்களை நிரப்புக:

(அ) நாங்கள் ......செய்தால் நரகத்தை அடைவோம்.

(ஆ) பிரமா......தொழிலைப் புரிகிறார்.

(இ) சிவபெருமான்......இல்லாதவர்.

### 3-ஆம் பாடம்

## திருக்கேதீசுவரம்

ஈழநாட்டிலே தேவாரம் பாடப்பெற்ற திருப்பதிகள் இரண்டு உண்டு. அவை திருக்கேதீசுவரம் திருக்கோணேசுவரம் என்பன. அவற்றில் திருக்கேதீசுவரத்தைக் குறித்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரம் பாடியிருக்கிறார்கள்.

இவ்வாலயம் ஈழநாட்டின் வடமேற்குப் பாகத்திலே மன்னாரையடுத்துள்ள மாதோட்டப் பகுதியிலே உள்ளது. பண்டைக்காலந்தொட்டு மாதோட்டம் சைவ சமயத்தின் இருப்பிடமாகியிருந்தது. மன்னாரில் இன்று காணப்படும் மாதோட்டம் பழைய மாதோட்ட நகரின் சுருங்கிய பெயராகும். அக்காலத்தில் மாந்தை துறைமுகப் பட்டினமாய் அமைந்திருந்ததென்றும், பிறநாட்டுக் கப்பல்கள் தங்கிப் போதற்குரிய இடமாகவிளங்கியதென்றும், தேவாரப் பாடல்கள் கூறுகின்றன, மாதோட்டத் துறைமுகத்திலே சங்குகளும், முத்துக்களும், மணிகளும் மட்டுமன்றிப் பல்வேறு தேசங்களிலிருந்து வந்த விலையுயர்ந்த பண்டங்களும் குவிந்து கிடந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு, பழைமைவாய்ந்த சிவன் கோவில் ஒன்றும், பாலாவித் தீர்த்தமுமுண்டு.

கேதீசுவரம் என்பது கேது என்னும் அசுரன் வழிபட்டு முத்தியடைந்த தலம் என்பதால் வந்த பெயர் என்பர்.

முன்னொரு காலத்திலே தேவர்கள் அமுதம் பெறும் பொருட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது அங்கே தோன்றிய அமுதத்தை எடுத்துக்கொண்டு, தேவர்கள் உண்பதற்காக ஓரிடத்தில் புகுந்தார்கள். அசுரர்களை அமுதம் பருகாவண்ணம் தடுத்தார்கள். இதே நேரத்தில் அசுரன் ஒருவன் மாறுவேடம் பூண்டு அவ்விடத்தில் புகுந்து கொண்டான்.

மோகினி வடிவங்கொண்ட திருமால் அமிர்தத்தைப் பகிர்ந்துகொண்டு வரும்போது, சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் ஒளித்து நின்ற அசுரன், தன்கரங்களை நீட்டி அமிர்தத்தைப் பெற்றுப் பருகினான். உடனே சூரிய சந்திரர்கள் சந்தேகித்துத் திருமாலுக்குக் காட்டினார்கள். திருமால் தன்கையிலிருந்த சட்டுவத்தால் தலைவேறு உடல் வேறு ஆகும்படி வெட்டினார். அசுரனும் அமுதம் பருகியதால் சாகாவரம் பெற்று இரண்டு உயிரும், இரண்டு உடலும், பெற்ற இரண்டு உருவங்களாயினான். இந்த இரண்டு உருவங்களே இராகுவும் கேதுவுமாகும். இவர்கள் இருவரும் கேதீசுவரத்தை யடைந்து தவஞ்செய்து முத்தியடைந்தனர் என்று கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் இலங்கையை ஆண்ட இராவணன் மனைவி மண்டோதரியும் திருக்கேதீச்சுவரப்பெருமானை வழிபட்டு அருள்பெற்றாள் என்று கூறப்படுகிறது. திருக்கேதீசுவர ஆலயத்தை இலங்கை வேந்தன் விசயன் புதுப்பித்தான் என்றும் கூறப்படுகிறது.

பிற்காலத்தில் யாழ்ப்பாணத்து அரசர்கள் திருக்கேதீசுவரத் திருப்பணியை நிறைவேற்றி வந்தனர். அக்காலத்தில் மாதோட்டப் பகுதியும், மன்னாரும் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாகவே இருந்தன. இவர்கள் காலத்துக்கு முன்பே பழைய திருக்கேதீசுவரக் கோயிலும் பாலாவியாற்றின் மேற்குக் கரையும் கடலாற் கொள்ளப்பட்டுவிட்டன. பின்பு இவ்வாலயத்துக்குரிய விக்கிரகங்களெல்லாம் நிலத்தினுட் புதைந்து கிடந்து கண்டெடுக்கப்பட்டன.

ஆறுமுக நாவலர் அவர்களின் அரிய பிரசங்கங்களினாலும், சைவ உணர்ச்சி மிக்க செட்டிமார்களின் பெருமுயற்சியினாலும், அங்கு புதிதான ஓர் ஆலயம் சமீப காலத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் புதிய இலிங்கம் ஒன்று கருவறையிலும் பழைய இலிங்கம் ஒன்று மேற்குப்பிரகாரத்திலும் வைத்துப் பூசிக்கப்படுகின்றன. இப்போதுள்ள ஆலயம் ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அழகான முறையிலே திருத்தப்பட்டதாகும். இங்கு கிரமமாகப் பூசைகளும் விழாக்களும் நடைபெற்று வருகின்றன. இவற்றைத் திருக்கேதீசுவர ஆலயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிச் சபையார் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

## வினாக்கள்

( 1 ) ஈழநாட்டிலேயுள்ள தேவாரம் பாடப்பெற்ற திருப்பதிகளெவை ?

( 2 ) திருக்கேதீசுவரத் தலத்தின்மேல் தேவாரம் பாடினோர் யாவர் ?

( 3 ) இவ்வாலயத் தீர்த்தத்தின் பெயர் யாது ?

( 4 ) மாதோட்டம் எங்குள்ளது ?

( 5 ) கேதீசுவரம் என்ற பெயருக்குக் காரணம் யாது ?

( 6 ) கீறிட்ட இடங்களை நிரப்புக.

(அ) ... என்னும் இருவரும் கேதீசுவரத்தை வழிபட்டு முத்தியடைந்தனர்.

(ஆ) இங்கு புதிய ஆலயம் ... ... ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது.

(இ) ... என்பது துறைமுகப்பட்டினமாய் அமைந்திருந்தது.

4-ஆம் பாடம்

# அகத்தியரும் பிள்ளையாரும்

முன்னொரு காலத்திலே அகத்தியர் என்ற பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தவத்தாற் பெரியவர்; உருவத்திற் சிறியவர்; நிரம்பிய கல்வியறிவு உடையவர்; சிவபெருமான் இடத்திலே அளவு கடந்த பத்தியுடையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை சிவபெருமானுடைய கட்டளைப்படி அகத்தியர் வடநாட்டிலிருந்து தென்னுட்டுக்கு வந்தார் வரும்போது ஒரு கையிலே கமண்டலமும், மறு கையிலே தண்டுங் கொண்டு வந்தார். கமண்டலத்திலே கங்கா நதியின் புண்ணிய தீர்த்தம் நிறைந்திருந்தது: வரும் வழியிலே கொங்கு நாட்டைச் சந்திக்க நேர்ந்த போது அகத்திய முனிவர் அங்கு சிலகாலந் தங்கினுர்.

தேவேந்திரன் அந்நாட்டிலே தவஞ் செய்து கொண்டு இருந்தான். அந்நேரத்திலே மழையில்லாமையால் பூமரங்கள் எல்லாம் வாடி நின்றன. இதனுல் சிவபூசைக்குத் தேவையான மலர்களைப் பெறமுடியாமல் இந்திரன் வருந்திப் பிள்ளையாரை நினைந்து வணங்கினுன். உடனே பிள்ளையார் அவர் முன் காட்சியளித்தார். அப்போது இந்திரன், "சுவாமி! தண்ணீர் இல்லாமையால் இங்குள்ள பூந் தோட்டம் வாடுகின்றது. இப்பொழுது இந்நாட்டில் தங்கியிருக்கின்ற அகத்திய முனிவருடைய கமண்டலத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தை ஊற்றினுல் அது ஆருகப் பாயும்" என்று கூறி வணங்கினுன். பிள்ளையார் அவ்விதம் செய்வதாகக் கூறி மறைந்தார்.

அகத்திய முனிவர் தங்கியிருந்த இடத்துக்கு ஒரு காகம் பறந்துவந்து முனிவரது கமண்டலத்தின் மேல் உட்கார்ந்தது இதனைக்கண்ட அகத்திய முனிவர் அக்காகத்தைத் துரத்தினுர். காகம் பறக்கும் போது கமண்டலத்திலிருந்த நீரைக் கவிழ்த்து விட்டுச் சென்றது. அகத்தியர் பெருஞ் சினங்கொண்டு திரும்பிப் பார்த்தபோது காகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த இடத்தில் ஒரு பிராமணச் சிறுவன் நிற்பதைக் கண்டார்.

சிறுவன் செய்த செயலுக்காக அவனைக் குட்டுவதற்கு அகத்தியர் சென்ற போது சிறுவனும் ஓடினான். அகத்தியரும் பின்தொடர்ந்து ஓடினார். அதிக தூரம் ஓடியும் சிறுவனைப் பிடிக்க முடியவில்லை. அகத்தியருக்குக் களைப்பு உண்டாகியது. கடுங் கோபத்தோடு அவர் ஓரிடத்தில் தங்கினார்.

அப்பொழுது அகத்தியர் முன்பு பிள்ளையார் தோன்றினார். காகமாகவும், சிறுவனாகவும் தோன்றியவர் விநாயகப் பெருமானே என்பதை முனிவர் உணர்ந்தார். ''ஐயோ! பெரும் பாவஞ் செய்தேன்! என்னுடைய பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறித் தம் தலையிலே குட்டி வணங்கினார். பிள்ளையாரும் அகத்தியருக்கு அருள் செய்து மறைந்தருளினார்.

அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து ஓடிய தீர்த்தம் ஆறாகப் பாய்ந்தது. இந்த ஆறுதான் காவிரி என்றும், பொன்னி என்றும் பெயர் கொண்டு, இப்போது தமிழ்நாட்டை வளஞ் செய்கின்றது.

### வினாக்கள்

(1) அகத்தியர் தென்னாட்டுக்கு வரும்போது எவற்றைக் கொண்டு வந்தார்?

(2) இந்திரன் பிள்ளையாரை நினைத்தது ஏன்?

(3) காகமாகப் பறந்து வந்தவர் யார்?

(4) அகத்திய முனிவர் விநாயகப் பெருமானை எப்படி வணங்கினார்?

(5) அகத்திய முனிவர் காகத்தை ஏன் துரத்தினார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 5-ஆம் பாடம்

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

## ( 1 )

திருவங்கமாலை

பண்:— சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் — தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

திருச்சிற்றம்பலம்

இதன் பொருள்:- தலையே நீ இறைவனை வணங்குவாயாக. பிரம விட்டுணுக்களுடைய மண்டையோடுகளை மாலையாக. அணிந்து கொண்டு. ஒரு மண்டையோட்டிலே பிச்சையெடுக்கின்ற தலைவனாகிய சிவபெருமானை, தலையே நீ வணங்கக் கடவாய்.

குறிப்பு:— பலி - பிச்சை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 2 )

திருச்சிற்றம்பலம்

கண்காள் காண்மின்களோ — கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னை
கண்காள் காண்மின்களோ.

திருச்சிற்றம்பலம்

இதன் பொருள்:— கண்களே நீங்கள் சிவபெருமானைக் காணுங்கள். கடலிலே மிதந்து வந்த நஞ்சை உண்டதிஞலே கறுத்த கழுத்தையுடையவரும், எட்டுத் தோள்களை வீசி நின்றாடுபவருமாகிய சிவபெருமானைக் கண்களே காணுங்கள்.

குறிப்பு:— கண்டம் - கழுத்து.

( 3 )

திருச்சிற்றம்பலம்

வாயே வாழ்த்து கண்டாய் — மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்.

திருச்சிற்றம்பலம்

இதன் பொருள்:— வாயே நீ சிவபெருமானை வாழ்த்தக் கடவாய்; மத யானையை உரித்து அதன் தோலைப் போர்வையாகப் போர்த்து, பேய்கள் வாழுகின்ற காட்டிலே கூத்தாடும் இறைவனை, வாயே நீ வாழ்த்தக் கடவாய்.

குறிப்பு:— உரி - தோல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 4 )

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் — காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு: சமணர் திருநாவுக்கரசு நாயனாரைக்கல்லுடன் கட்டிக் கடலிலே விட்டபொழுது நாயனார் சிவபெருமானைப் புகழ்ந்து பதிகம் பாடிக் கரையேறினார். அப்பொழுது பாடிய பதிகத்தின் இரண்டாம் செய்யுள் இதுவாம்

இதன் பொருள்:— பூக்களுக்குள்ளே சிறப்புடையது பொலிவு பெற்ற தாமரை. பசுக்களுள்ளே சிறந்தது சிவபெருமானுடைய அபிடேகப் பொருள்களைக் கொடுக்கும் பசு. அரசருள்ளே சிறந்தவன் செங்கோன்மையுடைய அரசன். அவை போன்று நாக்களுள்ளே சிறந்தது திருவைந்தெழுத்தை ஓதும் நாவே.

குறிப்பு:— கோ - அரசன். பொங்கு - பொலிகின்ற.

## 6-ஆம் பாடம்

# திருநீறு

சைவ சமயத்தவர்களின் விசேட சின்னமாக திருநீறு விளங்குகிறது. இதனை விபூதி என்று கூறுவர். விபூதி என்றால் மேலான செல்வம் என்பது பொருளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்திலேயுள்ள மற்றைய செல்வங்களெல்லாம் இவ்வுலக வாழ்க்கைக்கு உதவியாக இருந்தாலும் அவற்றால் அடையும் நன்மைகள் நிலையற்றவையாகும். ஆனால் விபூதியானது அவ்வாறன்றி எமது பிறவியை அறுத்து மோட்சத்தை எமக்குத் தருவதால் அதனை மேலான செல்வம் என்று கூறுவர். எம்மைப் பீடித்து நிற்கும் பாசங்களை நீறுக்குவதால் அதற்கு நீறு என்பது பெயராயிற்று.

பசுவினது சாணத்தை உருட்டி வெயிலிற் காயவைத்துப் புடமிட்டு நீறுக்கியதே தூய்மையான நீறுகும். திருநீறு வெண்மை நிறமானது. வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளமாகும். திருநீறு அணிவதால் எமது அகமும் புறமும் தூய்மை அடைகின்றன. திருநீற்றை உத்தூளனமாகவேனும் திரிபுண்டரமாகவேனும் தரிக்கலாம். உத்தூளனமாக அணிதல் என்பது, நீற்றை நீரிற் குழையாது பூசுதலாம். திரிபுண்டரமாவது நீரிற் குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதாம்.

காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும், ஸ்நானம் செய்தவுடனும், பூசைக்கு முன்னும், பின்னும், போசனத்திற்கு முன்னும், பின்னும், நித்திரைக்கு முன்னும், பின்னும், மலசல மோசனஞ் செய்து கால் கழுவிய பின்னும், தந்தசுத்தம் செய்த பின்னும் திருநீறு அவசியம் பூசுதல் வேண்டும். திருநீறு பூசும் பொழுது சிவபெருமானைத் தியானித்து வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனுந் திரும்பி அண்ணுந்து, ''சிவ சிவ'' என்று சொல்லிப் பூசுதல் வேண்டும். ஒருவன், திருநீறு பூசினுல் அத்திருநீறு படிந்த இடமெல்லாம் சிவலிங்கமாகிறது என்று சைவ சமய நூல்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டி நாட்டிலே சமண சமயம் பரவிய காலத்தில் அதனை அழித்துச் சைவத்தை நிலை நாட்ட எழுந்தருளினார் திருஞானசம்மந்தப் பெருமான். இதைக் கேட்ட சமணர்கள் பொறாமையடைந்தனர். பாண்டிய மன்னனுக்குத் தீயபுத்திமதிகள் கூறினர். சம்பந்த சுவாமிகள் இருந்த மடத்துக்குத் தீ வைத்தனர். அவர்கள் வைத்த தீ பாண்டியனையே சென்று அடைந்து வெப்பு நோயைக் கொடுத்தது. நோயைத் தீர்ப்பதற்குச் சமணர்கள் தேடிய பரிகாரம் ஒன்றும் பலிக்கவில்லை; இந்த நிலையில் சம்பந்த சுவாமிகள் அங்கு எழுந்தருளிய பாண்டியனை விபூதி அணியச் செய்வித்து வெப்பு நோயைத் தடுத்தருளினார். இதனால் பாண்டியனும் சைவ சமயத்தவனாகிப் பாண்டி நாடும் சைவ சமயத்தில் மேலோங்கியது; ஆகவே, பாண்டி நாட்டில் சைவ சமயத்தைப் பேணிக் காப்பாற்றியது திருநீறே!

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி
சிங்கார மான சிவனடி சேர்வாரே."

## வினாக்கள்

(1) விபூதி என்பதன் பொருள் யாது?

(2) வெண்மை நிறம் எதற்கு அடையாளமாகும்?

(3) உத்தூளனம் என்பது என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) திரிபுண்டரம் என்பது என்ன ?

(5) எவ்வெத் திசைகளை நோக்கித் திருநீற்றைப் பூச வேண்டும் ?

(6) கீறிட்ட இடங்களை நிரப்புக.

(அ) திருநீற்றைப் பூசும்போது.................தியானிக்க வேண்டும்.

(ஆ) பாண்டி நாட்டில் சைவ சமயத்தைப் பேணிக் காத்தது........................

(இ) விபூதி அணிவதால் எமது ................ தூய்மை அடைகின்றன.

## 7-ஆம் பாடம்

# திருக்கோணேசுவரம்

இவ்வாலயம் ஈழ நாட்டின் கீழ்க் கடற்கரையிலுள்ள திருக்கோணமலைப் பகுதியில் உள்ளது. திருக்கோணமாமலையின் கண்ணே அமைந்திருப்பதால் திருக்கோணேசுவரம் என்னும் பெயரைப் பெற்றது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் இத்தலத்தின் மீது தேவாரம் பாடியிருக்கிறார்.

ஒருமுறை ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்குமிடையில் சண்டையேற்பட்டது. இருவரும் தத்தம் வலிமையைக் காட்ட முயன்றனர். மகா மேருமலையின் முடிகளைப் பிடுங்கி வாயுபகவான் எறிந்தான். அவற்றுள் ஒன்று இலங்கையில் வீழ்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அதுவே திருக்கோணமலை என்றும், தட்சிண கைலாயமெனவும் வழங்கப்பட்டது. சிவ பெருமான் உமாதேவியாரோடு திருக்கைலாய மலை யில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் புரிதல் போல இத் திருக்கோணமலையிலும் எழுந்தருளி அருள் புரிகிறார் என்று கூறப்படுகிறது.

முன்னொரு காலத்திலே இலங்கையை ஆண் டவன் இராவணன். அவன் சிவபெருமானிடத்து மிகுந்த பத்தியுடையவன். அவனுடைய தாயும் சிவபத்தி மிகுந்தவள். ஒவ்வொரு நாளும் கோணேசுவரப் பெருமானை வழிபட்டு வருதல் அவருடைய வழக்கம். ஆனால், இலங்காபுரிக்கும் இவ்வாலயத்துக்கும் வெகுதூரம். இதனை உணர்ந்த இராவணன் கோணேசர் கோயிலிலுள்ள சிவலிங் கத்தை எடுத்துத் தனது நகராகிய இலங்காபுரிக் குக் கொண்டுபோக நினைந்து சிவலிங்கம் இருந்த இடத்தை வெட்டினான். அவன் வெட்டிய இடம், "இராவணன் வெட்டு" என்று இப்பொழுதும் வழங்கப்படுகிறது. இது சுவாமி மலையின் பக்கத் திலே கடற்கரை ஓரமாக அமைந்துள்ளது. பின் னர் தன் தாயார் இறந்த செய்தியறிந்து இரா வணன் வெட்டுவதை நிறுத்தினான். தன் தாயார் இறந்த சமயத்தில், அதனையறியாத இராவணன் கோணேசர் ஆலயத்தில் புகுந்தான். அப்பொழுது கோணேசர் அவனைத் தடுத்து நடந்த செய்தியை அறிவித்தார். மாதாவின் ஈமக் கடன்களை இரா வணன் செய்து முடித்தான். திருக்கோணமலைக்கு அணித்தாகவுள்ள கன்னியாய் தீர்த்தக் கரையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அக் கடமைகளைச் செய்து முடித்தான் என்று கூறப்படுகிறது.

பிற்காலத்தில் கோணேசர் ஆலயம் போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்ட போது, அங்கு பல கல்வெட்டுக்கள் கண்டு எடுக்கப்பட்டன. அதிலிருந்து மனுச்சோழனால் இவ்வாலயம் கட்டுவிக்கப்பட்டதென்றும், அவன் மகன் குளக்கோட்டன் மிகுதி வேலைகளை முற்றுவித்தான் என்றும் அறியக் கூடியதாய் இருக்கிறது.

கோணேசர் ஆலயத் திருப்பணிக்காக குளக்கோட்ட மன்னன் அதிகம் பாடுபட்டான். எத்தனையோ காணிகளையெல்லாம் கோயிலுக்கு உபகாரமாக அளித்தான். கோயிலுக்குத் தொழும்பு செய்யப் பல பணியாட்களை நியமித்தான்.

அடுத்ததாகக் கயபாகு மன்னனும் இவ்வாலயத்துக்குத் திருப்பணிகள் பல புரிந்துள்ளான். இம் மன்னன் ஒருமுறை கோணேசர் ஆலயத்துக்குக் கிட்டவந்தபோது அவனுடைய கண்ணொளி மங்கியது. அவன் திகைத்து ஒன்றுந் தெரியாதவனாக நின்றான்; அப்பொழுது கோணநாதர் பிராமண வடிவமாக அவன் முன்னே தோன்றி திருநீறு கொடுத்து மறைந்தார். அரசனும் அத் திருநீற்றை அணிந்து தன் கண்ணொளியைத் திரும்பப் பெற்றான். கோணேசுவரர் திருவருளை நினைந்து ஆலயத் திருப்பணியில் கவனஞ் செலுத்தினான். பெரும் பொருள் செலவழித்து ஆலயத்தைத் திருத்துவித்தான். கயபாகு மன்னனுடைய சந்ததியினரே, பின்னும் இவ்வாலய வேலையில் கவனஞ் செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இலங்கையை ஆண்ட காலத்தில், கோணேசர் ஆலயத் திருப் பணி சிறிது தடைப்பட்டது. ஆனல் ஆங்கிலேயர் காலத்தில் திரும்பவும் ஆலயத்தைப் புதுப்பிக்கும் வேலே ஆரம்பமானது. பழைய சிறப்புக்களே உணர்ந்து இவ்வாலயப் பணியைச் சைவ மக்கள் பலரும் நிறைவேற்றினர்.

ஈழநாட்டின் பழம் பெருமையைக் கோணேசு வரம் போன்ற திருத்தலங்களே எடுத்துக் காட்டு வதால், அவற்றை மேன்மேலும் புதுப்பித்தல் சைவ மக்கள் கடனகும்.

## வினக்கள்

(1) கோணேசுவரத்தின் மறு பெயர் யாது ?

(2) இவ்வாலயத் திருப்பணியில் கவனஞ் செலுத்திய மன் னர்கள் யாவர் ?

(3) இவ்வாலயத்தின் மேல் தேவாரம் பாடியவர் யார் ?

(4) இராவணன் தாயார் மரணச் சடங்கு எங்கு செய்யப் பட்டது ?

(5) கயபாகு மன்னனுக்குத் திருநீறு கொடுத்தவர் யார் ?

(6) கோணேசுவரர் ஆலயம் எப்பகுதியில் அமைந்துள்ளது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8-ஆம் பாடம்

# முருகக் கடவுளும் ஔவையாரும்

இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர் ஔவையார். அக்காலத்திலிருந்த பல பெண்பாற் புலவர்களுள்ளே இவர் தலைசிறந்தவர்; நிறைந்த புலமையும் கடவுட் பத்தியுமுடையவர்; இவரியற்றிய பாடல்களில் பலவற்றைப் பழைய தமிழ் நூல்களில் நாம் காணலாம். அப்பாடல்கள் பல அறிவுரைகளை எமக்கு எடுத்துக் கூறுகின்றன.

அக்காலத்தில் வாழ்ந்த பல தமிழரசர்கள் ஔவையாரின் மதிநுட்பத்தை மெச்சி அவரை அன்புடன் ஆதரித்தனர். ஔவையார் ஒருமுறை வேற்றூருக்குப் போய்க்கொண்டிருந்தார். முருகப் பெருமானையே மனதில் நினைந்து கொண்டு, காட்டு வழியாற் சென்று கொண்டிருக்கும் போது வெயில் அதிகமாக இருந்தது; பசியும் மிகுதியாக அவரை வாட்டியது; வழி நடந்த களைப்பால் ஒரு நாவல் மரத்தின் நிழலில் தங்கிவிட்டார். அவ்விடத்தில் சில நாவற் பழங்கள் விழுந்தன. ஔவையார் மேலே அண்ணாந்து பார்த்தார்; ஒரு பையன் மரத்திலிருந்து பழங்கள் உண்பதைக் கண்டார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவனை நோக்கி "தம்பி! எனக்குக் கொஞ்சம் பழங்கள் தருவாயா ?" என்று கேட்டார் ஔவையார். உடனே சிறுவன் "பாட்டி, பாட்டி! உனக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். இதனைக்கேட்ட ஔவையார் சிரித்து "எனக்குச் சுட்ட பழந்தான் வேண்டும்; போடு" என்றார்.

ஔவையாரைச் சோதிக்க விரும்பிய சிறுவன், நன்றாகப் பழுத்த பழங்களைப் பறித்து, நிலத்திற் போட்டான். பழங்களைப் பொறுக்கிச் சாப்பிடுவதற்காக ஆவலோடு குனிந்தார் ஔவையார். எல்லாப் பழங்களிலும் மணல் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார். ஒவ்வொன்றாக எடுத்து மணல் போகும்படி நன்றாக ஊதிச் சாப்பிட்டார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த சிறுவன் கை கொட்டிச் சிரித்தான். ஔவையார் ஒன்றும் அறியாதவராகிச் சிறுவனை அண்ணாந்து பார்த்தார். "ஊது பாட்டி ஊது, பழங்கள் நன்றாகச் சுடுகின்றனவா?" என்று நகைப்புடன் கேட்டான் சிறுவன். அப்பொழுது தான் ஔவையார் யோசித்தார். சிறுவனுடைய மதி நுட்பத்தையும், தான் அவனுக்குத் தோற்ற தன்மையையும் எண்ணி நாணமடைந்தார்.

சிறுவன் யாரென்பதை அறிய விரும்பி, "தம்பி! உனது புத்தியை மெச்சினேன். நீ யார்?" என்று கேட்டார். "ஔவையே! என்னை நீ அறியாயோ" என்று கூறிப் பச்சை மயில் மீதேறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதத்துடன் காட்சி கொடுத்தருளினர் முருகப் பெருமான். ஒளவையாரும் முருகப் பெருமானின் திருவருளை நினைத்து வணங்கினர்.

## வினக்கள்

(1) ஒளவையாரை ஆதரித்தவர்கள் யாவர் ?

(2) நாவல் மரத்திலே சிறுவனுக நின்றவர் யார்?

(3) ஒளவையார் நாவற் பழத்தை ஏன் ஊதினர்?

(4) ஒளவையாருக்கு முருகப் பெருமான் எவ்வாறு காட்சி கொடுத்தார்?

(5) "பழங்கள் நன்ருகச் சுடுகின்றனவா" என்று யார் கேட்டார்?

(6) ஒளவையார் நாணமடைந்ததேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9-ஆம் பாடம்

# சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம்



சுந்தரமூர்த்தி நாயனர்

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரின் கண்ணே அந்தணர் குலத்திலே சுந்தரமூர்த்தி நாயனர் அவதரித்தார். இவருடைய தந்தையார் சடையனர் என்பவர். தாயார் பெயர் இசை ஞானியார். சுந்தரருக்குப் பெற்றோர்களால் இடப்பட்ட பெயர் நம்பியாரூரர் என்பதாகும். நம்பியாரூரர் சிறு குழந்தையாக இருக்கும் போது நரசிங்கமுனையர் என்னும் மன்னரால் செல்வச் சிறப்போடு வளர்க்கப்பட்டார். திருமணப்பருவம் அடைந்த இவர், மணக்கோலத்தோடு கலியாணப் பந்தலில் நிற்கும் போது, சிவபெருமான் பிராமண வடிவத்தோடு எழுந்தருளி வந்து, இவரைத் தடுத்தாட்கொண்டார். பின்பு பல சிவதலங்களுக்குஞ் சென்று தேவாரங்கள் பாடினர். அவர் பாடிய பாடல்களில் மூன்று பாடல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 1 )

7-ந் திருமுறை பண்—இந்தளம்

## திருவெண்ணெய் நல்லூர்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டு
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே. [றையுள்

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :— சிவபெருமான் கிழப்பிராமண வடிவத்தோடு எழுந்தருளி வந்து சுந்தரமூர்த்தி நாயனரைத் திருமணப் பந்தலின் கண்ணே தடுத்தாட்கொண்டருளினர். பின்பு இறைவன் திருவெண்ணெய் நல்லூரில் காட்சி கொடுத்தருளி மறைந்தபோது, சுந்தரமூர்த்தி நாயனரால் மூதன் முதலாகப் பாடப்பெற்ற தேவாரம் இதுவாகும். முன்பு வேதியராக வந்த இறைவனையறியாது பித்தனென்று ஏசினர் சுந்தரர். அதனல் "பித்தா ! என்றே பாடுக," என்று பணித்தார் சிவபெருமான்.

இதன் பொருள்:— பித்தனே! பிறையைச் சூடியவனே எம்பெருமானே! அருள் உடையவனே! எவ்வகையாலும் அடியேன் உன்னை மறவாமலே இடையருது தியானிக்கின்றேன். நீயும் என்மனத்திலே உன்னை வைத்தாய். பெண்ணையாற்றுத் தென்கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் அருட்டுறையென்னுங் கோயிலில் எழுந்தருளிய தந்தையே! உனக்கு நான் அடிமையாகியிருந்து கொண்டே இனி ஆளல்லேன் என மறுக்கலாமோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:— அருளாளா—அருளுடையவனே, எத்தால்—எவ்வகையாலும், அத்தா—தந்தையே இனி—இப்பொழுது.

( 2 )

7-ந் திருமுறை

திருமழபாடி பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு:— சுந்தரமூர்த்தி நாயனார் திருவாலம்பொழில் என்னும்பதியில் நித்திரை செய்து கொண்டிருக்கும்போது, சிவபெருமான் கனவில் தோன்றி "மழபாடிக்கு வர மறந்தாயோ?" என்று கேட்டார், அவர் கட்டளைப்படியே நாயனார் மழபாடிக்குச் சென்று பாடிய பதிகம் இதுவாம்.

இதன் பொருள்:— பொன் போன்ற திருமேனியை உடையவரே! புலித்தோலை அரையிலே உடுத்து மின்னல் பொருந்திய (மாலைக் காலத்தை ஒத்த) சிவந்த சட்டையின் மேல் ஒளிவிடுங் கொன்றை மலரை அணிந்தவரே! தலைவரே! பெறுதற்கரிய இரத்தினமே! மழபாடியில் இருக்கும் மாணிக்கமே! அன்னையே! தேவரீரையல்லாது நான் இனி யாரை நினைப்பேன்.

குறிப்பு:— அசைத்து—உடுத்து (கட்டி); மின்னார்—மின் போன்ற, மன்னே—தலைவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 3 )

7-ந் திருமுறை

திருக்கோளிலி பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவை யட்டித் தரப்பணியே.

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு— சுந்தரமூர்த்தி நாயனாரும் பரவையாரும் திருவாரூரிலே இருக்கும்போது அவர்களுக்கு வேண்டிய நெல்லை குண்டையூர்க்கிழார் என்னும் வேளாளர் கொடுத்து வந்தார். ஒருமுறை மழையில்லாமையால் நெல்லனுப்ப முடியாமற் போயிற்று. இதனால் மனவருத்தத்தோடு குண்டையூர்க்கிழார் நித்திரை செய்யும்போது சிவபெருமான் கனவிலே தோன்றி சுந்தரனுக்கு அனுப்பும்படி 'நெல்லைத் தந்தோம்' என்று அறிவித்தார். குண்டையூர்க்கிழார் அதிசயித்து விழித்து இச் செய்தியைச் சுந்தரருக்கு அறிவித்தார். சுந்தரமூர்த்தி நாயனாரும் நெல்லின் தொகையைக் கண்டு அதிசயித்து, அதனைக் கொண்டு செல்வதற்குரிய ஆளை உதவவேண்டும் என்று சிவபெருமானிடம் கேட்டுக் கொண்ட பதிகம் இதுவாம்.

இதன் பொருள்:- அடியேன் உம்மை இடைவிடாது நினைத்து எப்பொழுதும் வணங்குவேன். வாள் போன்ற கண்ணையுடையவளாகிய பரவையார் பசியால் வருந்தாமல் குண்டையூரிலே நெல்லைப் பெற்றேன். திருக்கோளிலியில் எழுந்தருளிய எமது பெருமானே, அவற்றை வீடு கொண்டு போய்ச் சேர்க்க ஆளில்லை. ஆனபடியால் அவற்றை வீடு சேர்க்க தேவரீர் உமது பரிசனரைக் கட்டளையிட வேண்டும்.

குறிப்பு:- நித்தலும்-எப்பொழுதும் மடவாள்-பரவை அட்டித்தர-கொண்டுபோய்ச் சேர்க்க, பணி-கட்டளையிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-ஆம் பாடம்

# நித்திய கருமம்

நாம் இந்த உலகத்திலே பிறந்திருக்கிறோம். சில காலங்களுக்காவது இவ்வுலகத்திலிருந்து நல் வாழ்வு வாழவே விரும்புகிறோம். இதற்கெல்லாம் நமக்கு அருந்துணை புரிபவர் கடவுளே. அவருடைய அருள் இல்லாவிட்டால் ஒரு நொடிப் பொழுதே னும் நாம் வாழ முடியாது.

கடவுளுடைய அருளை நாம் பெற வேண்டுமா னால் அவரிடத்து மிகுந்த பத்தி உடையவர்களாக இருக்க வேண்டும். தினந்தோறும் பல முறை அவரை நினைக்க வேண்டும். அப்படி நினைப்பதற் குச் சில வழிகளைப் பெரியோர்கள் நியமித்திருக் கிறார்கள். அவை நித்திய கருமம் என்று சொல் லப்படும்.

கோலானது குருடனுக்கு வழிகாட்டுவது போல நித்திய கருமங்களே இவ்வுலகத்தின் இன்ப வாழ்க்கைக்கும், மறுவுலகத்தின் மோட்ச வாழ்க் கைக்கும் வழிகாட்டுவனவாக உள்ளன; அவற்றைக் கிரமந் தவறாது அனுட்டித்தல் சைவ மக்களின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் உதிப்பதற்கு முன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். எழும்பும்போது 'சிவ சிவ' என்று சொல்லிக் கடவுளைத் தியானித்தல் வேண்டும். பின்பு மலசல மோசனஞ் செய்து கை, கால் கழுவிக்கொள்ள வேண்டும்; பல் விளக்கி, முகம் கை கால்களைச் சுத்தமாகக் கழுவித் திருநீறு பூசிக் கடவுளை வழிபடவேண்டும். ஸ்நானஞ் செய்யப் புகுங்கால் உடுத்திருந்த ஆடைகளைத் தோய்த்து உலரவிட வேண்டும். பின்பு நீராடி உடம்பைத் தூய்மையாக்கிக்கொள்ள வேண்டும். தோய்த்து உலர்ந்த ஆடைகளை உடுத்தி, விபூதி தரித்துக் கொண்டு சிவபெருமானை வழிபடல் வேண்டும்.

வழிபடும்போது அன்றலர்ந்த புதுப் பூக்களைக் கொய்து, இறைவனின் திருவடிகளுக்குச் சூட்டியும், தூப தீபங் காட்டியும் வணங்குதல் நன்று. தீட்சை பெற்றவர்கள் சந்தியாவந்தனஞ் செய்தல் வேண்டும். அதன்பின் கோயிலுக்குப் போய் வருதல் சிறந்த கருமமாகும்.

உணவு உண்ணத் தொடங்குமுன், சிவபெருமானைத் தியானித்து அவருக்கு எம்மை அர்ப்பணித்தல் வேண்டும். உண்ணும் உணவில் ஒரு பகுதியைக் காகம் முதலிய பிராணிகளுக்கு இடுதல் வேண்டும். உண்ணும் போது தேவையற்ற வார்த்தைகளைப் பேசாது, சிவபெருமானையே மனதில் நினைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை விட்டு வெளியே போகும் போதெல்லாம் விபூதி தரித்தல் வேண்டும். விபூதி தரிக்கும் நேரமெல்லாம் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும். வழியிலே கோயில்களைக் கண்டால் கும்பிடுதல் வேண்டும். கோயிலிலே அடிக்கிற மணிச் சத்தம் கேட்கும் போதெல்லாம் அப்பக்கம் நோக்கிக் கடவுளைத் தியானித்தல் வேண்டும். வேலைகள் முடிந்தபின் ஓய்வான நேரங்களில் தேவார திருவாசகங்களை ஓதுதலும் மெய்யடியார் சரித்திரங்களைப் படித்தலும் நன்று. நித்திரைக்குப் போகுமுன் விபூதி பூசுதல் வேண்டும்.

இப்படியாகச் செய்து வருவோமானால் சிவ உணர்வு எமது உள்ளத்திற் பெருகும். அதனால் நாம் பிறவி எடுத்த பயனையும் அடையலாம்.

## வினாக்கள்

(1) நித்திரை விட்டெழும்பும் போது என்ன செய்ய வேண்டும் ?

(2) நீராடுவதற்கு முன் என்ன செய்ய வேண்டும் ?

(3) தீட்சை பெற்றவர்கள் யாது செய்ய வேண்டும் ?

(4) உண்ணும் போது கவனிக்க வேண்டியன யாவை ?

(5) ஓய்வான நேரங்களில் யாது செய்ய வேண்டும் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-ஆம் பாடம்

# கதிர்காமம்

ஈழநாட்டிலே முருகப் பெருமான் கோயில் கொண்டருளும் ஆலயங்கள் பல உண்டு; அவற்றுள் மிகப் பிரசித்தி பெற்றது கதிர்காமம்.

இது ஈழநாட்டின் தென்கீழ்பால் உள்ளது. ஆலயத்தின் அருகே மாணிக்க கங்கை என்னும் நதி ஓடுகிறது. இதுவே இவ்வாலயத்துக்குரிய புனித தீர்த்தமாம்.

கதிர்காமம் என்பதற்குத் தினை நிறைந்த கிராமம் என்பது பொருளாகும். இப்பகுதியைச் சுற்றித் தினைப் பயிர்கள் அதிகமாகக் காணப்பட்டன என்றும், வேடுவச் சாதியினரே அங்கு வசித்தனர் என்றுங் கூறுவர். இக் காலத்திலும் ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் வேடுவச் சாதியார் வாழுவதைக் காணலாம். அந்தக் காலந்தொட்டு வேடுவச் சாதியினர் வழிபடு தெய்வம் முருகப் பெருமானே என்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுதும் கதிர்காம ஆலயத்துக்கு வேடர் வழிவந்த சிங்களவர்களே பூசை செய்கின்றனர். இவர்களை 'கப்ருளை' என்று அழைப்பார்கள். இவர்கள் வாயைச் சீலையால் கட்டிக்கொண்டே பூசை செய்வது வழக்கமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காம ஆலயத்தின் கட்டிடம் மிகச் சிறியது. கோயிலின் மூலஸ்தான வாசல் ஒருபோதும் திறக்கப்படுவதில்லை. அது எப்பொழுதும் திரையால் மறைக்கப்பட்டிருக்கும். திரையிலே முருகனுடைய படம் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு ஆடி மாதத்தில் விசேட உற்சவங்கள் நடைபெறுகின்றன. அவற்றைவிட, திருக்கார்த்திகை, வருடப் பிறப்பு முதலிய தினங்களிலும் விசேட உற்சவங்கள் நடைபெறுகின்றன. உற்சவ காலங்களில் மூலஸ்தானத்திலிருக்கும் இயந்திரத் தகடு வைக்கப்பட்ட பெட்டியைக் கோயில் யானை மீது எழுந்தருளச் செய்து வீதிவலம் வருவது வழக்கமாகும். பத்தகோடிகள் தேனுந் தினைமாவுங் கொண்டு மாவிளக்கேற்றியும், காவடி எடுத்தும், கற்பூர தீபச் சட்டி ஏந்தியும் முருகப் பெருமானை வழிபடுகின்றனர்.

ஆலயத்துக்கு அணித்தாகக் கதிரைமலை என்ற பரிசுத்த மலை காணப்படுகிறது. கோயிலுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் இம் மலைமேல் ஏறி அங்கெழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு வழிபாடாற்றித் திரும்புவர்ர்கள். அடுத்து, சில மைல் தூரத்தில் செல்லக்கதிர்காமம் என்னுந் தலம் உள்ளது. இங்குள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்று அடியார்கள் பொங்கலிட்டு வணங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் கதிர்காம ஆலயத்துக்குப் பக்கத்தில் தெய்வயானை அம்மன் ஆலயமும், எதிரே வள்ளி யம்மன் ஆலயமும், வலப்பக்கத்திற் பிள்ளையார் ஆலயமும் அமைந்திருக்கின்றன.

கதிர்காமத்தைப் பற்றி வழங்கப்படுகின்ற கதை ஒன்று உண்டு. முத்துலிங்க சுவாமிகள் என்பவர் ஒருவர் முருகப்பெருமானிடத்தில் மிகுந்த பத்தியுடையவராக இருந்தார். பொன் தகட்டிலே முருகப்பெருமானது இயந்திரத்தை மந்திர வடிவாக அமைத்து வணங்கவிரும்பினுர். இதனுல் இயந்திரத் தகட்டிலே மந்திர வடிவாக முருகனை அமைத்துத் தன்னுடன் கொண்டு புறப்பட்டார். அதே நேரத்தில் முருகன் தன்னை விட்டுச் செல்வதுபோல் வள்ளிநாயகி அம்மையாருக்குத் தோன்றியது. உடனே அம்மையார் முத்துலிங்க சுவாமிகளின்முன் தோன்றி முருகனைக் கொண்டு செல்ல வேண்டாமென வேண்டினுர். இதனுல் அந்த இயந்திரத் தகட்டை அவ்விடத்திலேயே வைத்து வணங்குதற்பொருட்டு முத்துலிங்க சுவாமிகளும் கதிர்காமத்திலேயே தங்கினுர். வள்ளிநாயகியம்மையாரும் மறைந்தருளினுர். இந்த இயந்திரப் பெட்டியே திருவிழாக் காலத்தில் யானை மீது வீதி வலம் வருகிறது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துலிங்க சுவாமிகள். இத்தலத்திலேயே பல் காலந் தங்கியிருந்து முத்தியடைந்தார். அவருடைய ஞாபகமாக முத்துலிங்க சுவாமிகள் ஆலயம் கதிர்காமத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

சைவ சமயத்தவர்களாகிய நாம், ஒரு முறையாவது கதிர்காமத்தைத் தரிசித்து, முருகப்பெருமானின் அருளைப் பெற்றுப் பேரானந்தமடைவோமாக. அருணகிரிநாதரும் இவ்விடத்துக்கு வந்து முருகப் பெருமானை வணங்கித் திருப்புகழ் பாடியிருக்கின்றார்.

## வினாக்கள்

(1) கதிர்காம ஆலயம் எங்கே அமைந்துள்ளது?

(2) கதிர்காமம் என்பதன் பொருள் யாது?

(3) வேடுவச் சாதியார் யாரை வழிபடுவர்?

(4) கதிர்காமத்தின் விசேட உற்சவகாலங்களெவை?

(5) முருகப்பெருமானது இயந்திரத்தை மந்திரவடிவமாக அமைத்து வணங்கியவர் யார்?

(6) கீறிட்ட இடங்களை நிரப்புக,

(அ) கதிர்காமத்துப் பூசகர்கள் ...... என்று அழைக்கப்படுவர்.

(ஆ) கதிர்காமத்தின் புனித தீர்த்தம் ........ ஆகும்.

(இ) பக்தர்கள் ... ... கொண்டு மாவிளக்கேற்றி வணங்குவார்கள்

12-ஆம் பாடம்

# சம்பந்தர் ஞானப்பாலுண்டது

சோழவள நாட்டிலே, *சீகாழி என்ற ஊரிலே சிவபாதவிருதயர் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் பகவதியார். அவர்கள் இருவரும் சிவபிரானிடத்து மிகுந்த பத்தியுடையவர்கள். அக்காலத்திலே தமிழ் நாடெங்கும் சமண சமயமும், பௌத்த சமயமும் மேலோங்கி இருந்தன. சைவ சமயம் குன்றியிருந்தது. இதனாற் கவலையடைந்திருந்த சிவபாதவிருதயர் சிவபிரானிடம் முறையிட்டார். சைவ சமயத்தை வளர்த்தற்பொருட்டுத் தமக்கு ஒரு சற்புத்திரரைத் தந்தருள வேண்டுமென்று அருந்தவஞ் செய்தார்.

சிவபெருமானுடைய திருவருளினாலே பகவதியார் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக் குழந்தையை மிகவும் அன்புடன் அவர்கள் வளர்த்து வந்தனர்;

குழந்தைக்கு மூன்றும் வயது நடக்கும் பொழுது ஒரு நாள், சிவபாதவிருதயர் கோயிலுக்குப் போகப் புறப்பட்டார். அச் சமயத்தில், குழந்தை தானும் வரவேண்டுமென்று அழுதது. தகப்பனார்,

*இப்பெயர் உலகவழக்கில் சீர்காழி என மருவிவழங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேண்டாம் என்று தடுத்தபோதும் குழந்தை அதனைக் கேட்கவில்லை. மேலும் அழுகை நீடித்த தால் குழந்தையைத் தன்னுடனேயே கூட்டிக் கொண்டு சென்றார் சிவபாதவிருதயர்.

கோவிலுக்குச் செல்வதற்கு முன் நீராடுவதற் காகப் பக்கத்திலே உள்ள திருக்குளத்துக்குச் சென் றார். குளக்கரையிலே பிள்ளையை இருத்தி விட்டுத் தான் தீர்த்தத்தினுள்ளே இறங்கி நீராடினார். சிறிது நேரத்தால் தந்தையாரைக் காணாது குழந்தை துடித்தது. கண்ணீர் ததும்பக் கையாற் கண்ணை பிசைந்து, பிசைந்து அழுதது நாலா பக்கமும் திரும்பிப்பார்த்து அழுது, பின்பு சிவபெரு மானின் கோயிற் கோபுரத்தை அண்ணாந்து பார்த்து அழுதது. 'அம்மே! அப்பா!' என்று குழந்தை அழுஞ் சத்தம் சிவபெருமானின் திருச் செவிகளிற் பட்டது.

முற்பிறப்பிலேயே பெருந்தவம் புரிந்த அக் குழந்தையின் அழுகையை மாற்றச் சிவபெருமான் திருவுள்ளங் கொண்டார். பார்வதி தேவியாரோடு இடபாரூடராய் எழுந்தருளினார்; தீர்த்தக் கரை யையடைந்து, உமாதேவியாரை நோக்கி, "உன் னுடைய முலைப்பாலைப் பொற் கிண்ணத்திலே கறந்து இவனுக்கு ஊட்டுக" என்று அருளிச் செய் தார். அங்ஙனமே உமாதேவியார் குழந்தையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்துக் கண்ணீர் துடைத்துத் திருமுலைப்பாலை ஊட்டியருளினார். குழந்தையும் பாலைப் பருகி, அழுகை தீர்ந்து பேரானந்தமடைந்தது.

சிவபாதவிருதயர், சிறிது நேரத்தால் தமது ஸ்நானத்தை முடித்துவிட்டுக் கரையிலேறினார். குழந்தையின் வாயிலிருந்து பால் வடிந்திருப்பதைக் கண்டார்; யாரிடமோ பால் வாங்கிக் குடித்து விட்டதேயென்று நினைத்துக் குழந்தையை நோக்கி, "உனக்குப் பால் தந்தவர் யார்?" என்று கோபத்துடன் கேட்டார்; கையிலே எடுத்த ஒரு சிறு தடியால் அடிப்பதற்கு ஓங்கினார்.

உடனே குழந்தை தனது திருக்கை விரலினாலே ஆகாயத்தைச் சுட்டிக்காட்டி "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தைப் பாடியது. இதனைக் கண்ட சிவபாதவிருதயர் பேராச்சரியமடைந்து இதுவெல்லாம் சிவபெருமானது திருவருளே, என்பதையும், தமது குழந்தைக்குப் பால் கொடுத்தவர் உமாதேவியாரே என்பதையும் உணர்ந்தார். தாம் பெற்ற தெய்வக் குழந்தையின் மகிமையை எண்ணிப் பேரானந்தமடைந்தார். குழந்தையைத் தோளிற் சுமந்துகொண்டு ஆனந்தக் கூத்தாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தெய்வக் குழந்தை, சிவபெருமானால் ஆளப்பட்டமையாலே, "ஆளுடைய பிள்ளையார்" என்ற பெயரையும், ஞானப்பால் உண்டமையாலே "திருஞான சம்பந்தர்" என்ற பெயரையும் பெற்றது.

திருஞானசம்பந்தர் பல சிவஸ்தலங்களையும் தரிசித்துத் தேவாரம் பாடியருளினார். இவர் பாடிய தேவாரங்களை, முதல் மூன்று திருமுறைகளாக வகுத்துள்ளார்கள்.

## வினாக்கள்

(1) திருஞானசம்பந்தர் திருஅவதாரஞ் செய்த திருப்பதி யாது?

(2) சம்பந்தரின் தந்தையார் யார்?

(3) எந்தச் சமயத்தை வளர்த்தற் பொருட்டு ஞானசம்பந்தர் அவதரித்தார்?

(4) குழந்தை என்ன கூறி அழுதது?

(5) சம்பந்தருக்கு ஞானப்பாலூட்டியவர் யார்?

(6) "தோடுடைய செவியன்" — இது யாராலே பாடப்பட்டது?

(7) குறிட்ட இடங்களை நிரப்புக:

(அ) சம்பந்தர் பாடிய தேவாரங்களை முதல்......... திருமுறைகளாக வகுத்தனர்.

(ஆ) சிவபெருமானாலே ஆளப்பட்டமையாலே......... என்ற பெயர் ஏற்பட்டது.

(இ) ஞானப்பாலுண்டமையால்............என்றபெயரைப் பெற்றார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13-ஆம் பாடம்

# மாணிக்கவாசக சுவாமிகள்

## திருவாசகம்



மாணிக்கவாசக சுவாமிகள்

பாண்டி நாட்டிலேயுள்ள திருவாதவூரிலே, மாணிக்கவாசக சுவாமிகள் அவதரித்தார், இவர் தந்தையார் பெயர் சம்புபாதாசிரியர். தாயார் சிவஞானவதி என்பவர். அரிமர்த்தன பாண்டியன் இவரது அறிவுத் திறத்தையும் பெருமையையும் அறிந்து, இவரை அழைத்துத் தன் முதன் மந்திரியாக அமர்த்திக் கொண்டான் மந்திரிப் பதவியிலிருக்கும்போது, ஒருநாள் திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே, சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டார். இவர் பல தலங்களுக்குஞ் சென்று பாடிய பாடல்களே திருவாசகமாம். அவற்றில் இரண்டு பாடல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 1 )

8-ந் திருமுறை                                   தில்லையில் அருளப்பட்டது

## திருச்சாழல்

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு:— மாணிக்கவாசகர் புத்தருடன் வாது செய்து வென்றபொழுது புத்தர் கேட்ட கேள்வியும் விடையுமாக இப்பாட்டு அமைந்துள்ளது.

இதன் பொருள்:— ஏடி தோழி! சிவபெருமான் பூசிக்கொள்வதும் வெள்ளை நிறமுள்ள விபூதியே. அணிந்து கொள்வதும் சீறுகின்ற பாம்பே, திருவாயால் பேசிக்கொள்வதும் மறைகளே-பெண்ணே இவற்றைப் பார், இவற்றின் நோக்கமென்ன? (இது கேள்வி)

சாம்பலைப் பூசுவதினாலும், மறை பேசுவதினாலும் பாம்பை அணிந்து கொள்வதினாலும் இறைவனுக்கு என்ன இழிவு? எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் அவ்வவ்வுயிர்களின் தன்மையாயிருந்தான் காண் சாழலோ. (இது விடை)

குறிப்பு:— சாழல்-பெண்கள் விளையாட்டுக்களில் ஒன்று. பூண்பது - அணிவது. பொங்கு - சீறும். அரவம் - பாம்பு. மறை - வேதம். இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2)

8-ந் திருமுறை　　　　　　　　　　　　　　　　　தில்லையில் அருளப்பட்டது

## அச்சோப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு:— சிவபெருமான் தனக்கு அருளிய தன்மையை நினைத்து, மாணிக்கவாசகர் பேரானந்தங் கொண்டு பாடிய பாடல் இதுவாம்.

இதன் பொருள்:— முத்தி மார்க்கத்தை அறியாத அறிவிலிகளுடன் சேரவிருந்த என்னை, அன்பு நெறி அறியும்படி செய்து, பழைய வினைகள் நீங்கும்படி உயிரின் மலங்களை நீங்கச் செய்து, சிவரூபமாக்கி என்னை ஆண்ட இறைவன் எனக்குச் செய்த அருளை வேறு யார்தான் பெறுவார்கள்.

குறிப்பு:— அச்சோ - அதிசயச் சொல். மூர்க்கர் - அறிவில்லாதவர். நெறி-வழி. பாறுதல்-அழிதல். சித்தம்-உயிர். அத்தன் - இறைவன், தலைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14-ஆம் பாடம்

# கோயிலுக்குச் செல்லுதல்

சைவ சமயத்தவர்களாகிய நாம், தினமும் சிவபெருமானைப் பத்தியுடன் வணங்கி வருதல் வேண்டும். அவரை வணங்குவதற்கு திருக்கோயில்களே சிறந்த சாதனங்களாக அமைந்துள்ளன.

கோ என்பது கடவுளையும், இல் என்பது இருப்பிடத்தையும் குறிக்கும். எனவே கோயில் என்பது கடவுளுடைய இருப்பிடமாகும். கடவுள் எங்கும் நிறைந்தவராயினும், கோயில்கள் போன்ற புனிதமான தலங்களிலே தான், நாம் இறைவனை மனமாரப் பூசித்து அருள்பெற வழியுண்டாகிறது. பல்வேறு திருவுருவங்களையும் தரிசித்து வழிபடுதலே சிறந்ததாகும்

நாம் தினந்தோறும் கோயிலுக்குச் சென்று வருதல் நன்று. ஒவ்வொருநாளும் சென்று வர இயலாதவர்கள், வெள்ளிக்கிழமைகளிலும் திங்கட்கிழமைகளிலும் மற்றும் விசேட புண்ணிய தினங்களிலும் சென்று சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குச் செல்லும்போது, நீராடித் தூய்மையான ஆடைகளை உடுத்திக்கொண்டு திருநீறு அணிந்து செல்லுதல் வேண்டும். கோயிற்பூசைக்கு வேண்டிய பால், பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கர்ப்பூரம், பூக்கள் என்பனவற்றைக் கொண்டு செல்லுதல் நன்று.

கோயிலுக்குக் கிட்டப் போனவுடன், பக்கத்தேயுள்ள நீர்நிலையில் கால்களைக் கழுவி தூலலிங்கமாகிய கோபுரத்தைக் கும்பிட்டுக்கொண்டு கோயிலினுள்ளே செல்லுதல் வேண்டும்.



நந்தி

கோயிலுக்குள்ளே சென்றதும் முதலில் நந்திதேவரை வணங்குதல் வேண்டும். அவர்தாம் சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அனுமதி கொடுப்பவர். ஆகவே, அவரை வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு உள்ளே சென்று பலிபீடத்துக்கு இப்பால் நின்று வணங்குதல் வேண்டும்.

வணங்கும் போது, ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யவேண்டும். அட்டாங்க நமஸ்காரமாவது, தலை, இரு கைகள், இரு காதுகள், மோவாய், இரு தோள்கள், என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திற் படிய விழுந்து வணங்குதலாம். பஞ்சாங்க நமஸ்காரமாவது, தலை, இரு கைகள், இரு முழந்தாள்கள் என்பன நிலத்திற் படிய வணங்குதலாம். இந்த வணக்கங்களைக் கோயில்களிலே நீங்கள் கண்டிருப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரின், திருவுருவத்தைக் கோயிலின் ஒரு பகுதியிலே காணலாம். நாம் பிள்ளையாரைத் தரிசனஞ் செய்யும் போது, முட்டியாகப் பிடித்து இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டிக் கும்பிடுதல் வேண்டும். பின்பு உமா தேவியார், முருகன், வீரபத்திரர் முதலிய தெய்வங்களை வணங்குதல் வேண்டும். கூப்பிய கைகளுடன், அருட்பாக்களையாயினும் பஞ்சாட்சரத்தையாயினும் ஓதிக் கொண்டு, கோயில் வீதியை வலம் வருதல் வேண்டும். கோயிலை வலமாகச் சுற்றி வந்த பின்பு, சுவாமி சந்நிதானத்தில் நமஸ்காரம் செய்தல் வேண்டும். இறைவனுக்குக் காட்டும் தூபதீபங்களைத் தரிசித்துப் பத்தியோடு கும்பிடுதல் வேண்டும்.


பிள்ளையார்

கோயிலுக்குப் போனால் நாம் வேடிக்கைகளைப் பார்ப்பதும் வீண்வார்த்தைகள் பேசுதலும் கூடா. சண்டையிடுதல், எச்சில் உமிழ்தல், மயிர் சீவுதல், செருப்புடன் போதல் முதலிய தீய காரியங்களைச் செய்தல் கூடாது.

இவ்வாறு நாம் தினந்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று வணங்குவோமானால் எமக்கு ஏற்படும் துன்பங்களினின்றும் நீங்கி இன்ப நிலையையடைவோம் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினக்கள்

(1) கோயில் என்பதன் கருத்து யாது?

(2) எந்தெந்த நாட்களில் கட்டாயமாக கோயில் தரிசனஞ் செய்தல் வேண்டும்?

(3) சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அனுமதி கொடுப்பவர் யார்?

(4) அட்டாங்க நமஸ்காரம் யார் செய்தற்குரியது?

(5) பஞ்சாங்க நமஸ்காரம் யார் செய்தற்குரியது?

(6) நெற்றியிலே குட்டிவணக்கஞ் செலுத்துவது யாருக்கு?

(7) கோயிலிலே செய்யத்தகாத காரியங்களெவை?

## 15- ஆம் பாடம்

# மாவிட்டபுரம்

இலங்கையின் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் மாவிட்டபுரமும் ஒன்றாகும். இது யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே பத்து மைல் தூரத்தில் உள்ளது. இங்கே பிரசித்தி பெற்ற கந்தசுவாமி கோயில் ஒன்று உண்டு. கோயிலுக்குரிய புனித தீர்த்தமாகக் கீரிமலைக் கேணி அமைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் அழகான சித்திர வேலைப்பாடு களுடன் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் முற்புறத் தில் நவீன முறையில் கோபுரம் அமைக்கப்பட்டுள் ளது. இலங்கையிலுள்ள கோயிற் கோபுரங்களில் இதுவே மிக உயர்ந்ததாம்.

இங்கே ஆனி ஆடி மாதங்களில் இருபத்தைந்து நாள்களுக்குத் தொடர்பாகத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆடி அமாவாசைக்கு முதல் நாள் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. ஆடி அமாவாசையே தீர்த்த தினம்.

இவ்வாலயம் அமைக்கப்பட்ட வரலாற்றைப் பற்றிய கதை ஒன்று உண்டு. இந்தியாவிலே உக் கிர சோழன் என்று ஓர் அரசன் இருந்தான். அவ னுடைய மகள் மாருதப்புரவீகவல்லி என்பவள். இவள் ஒருநாள் பூந் தோட்டத்துக்கு உலாவச் சென்றபோது அங்கே ஒரு முனிவர் தவஞ்செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவர் பெயர் கலைக்கோட்டு மாமுனிவர். அவரது வடிவத்தைக் கண்டு அரசகுமாரி ஏளனஞ் செய்து நகைத்தாள். இதனால் கோபமடைந்த முனிவர், "உனது முகம் குதிரை முகமாக மாறுக" என்று சாபம் இட்டார். அவரது சாபப்படியே குமாரத்தியின் முகம் குதிரை முகமாக மாறியது.

இதனால் கவலையடைந்த மாருதப்புரவீகவல்லி பல இடங்களுக்குஞ் சென்று பரிகாரந் தேடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கோயில்களுக்குஞ் சென்று வணங்கினுள். ஒன்றும் பயனளிககவில்லை. கடைசியில் ஒரு முனிவரின் கட்டளைப்படி யாழ்ப்பாணம் வந்து கீரிமலையில் தீர்த்தமாடினுள். பின் மாவிட்டபுரத்தை அடைந்து கந்தசுவாமியாரை வணங்கித் தனது குறையை முறையிட்டாள். கந்தசுவாமியாரின் அருளினுலே அவளுடைய குதிரை முகம் மாறி அழகான மங்கை முகம் தோன்றியது.

இதனுற் பெருமகிழ்ச்சியடைந்த அரசகுமாரி கந்தசுவாமியாரை மனமாரப் பூசித்து அவருக்கு அவ்விடத்தில் ஓர் ஆலயம் எழுப்பவேண்டுமென்று விரும்பினுள். நடந்த செய்தியைத் தந்தைக்கு அறிவித்து, அங்கிருந்து விக்கிரகங்களை அனுப்பும்படி வேண்டினுள்.

உக்கிரசிம்மனும் இதனைக்கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்து, கந்தசுவாமியார், வள்ளியம்மன், தெய்வயானை அம்மன் ஆகியவற்றின் விக்கிரகங்களைச் சோழ நாட்டிலிருந்து அனுப்பி வைத்தான் அவை, காங்கேசன்துறையில் கொண்டுவந்து இறக்கப்பட்டன. மாருதப்புரவீகவல்லி இவற்றை வைத்து ாவிட்டபுரத்தில் கோயில் கட்டுவித்தாள்.

குதிரை முகம் நீங்கிய இடமாகையால் இவ்விடத்துக்கு மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்பட்டது என்று கூறுவார்கள். மாருதப்புரவீகவல்லி பல காலம் இவ்விடத்திலேயே தங்கியிருந்தாள். இவள் தங்கியிருந்த இடம் குமாரத்தி பள்ளம் என்று கூறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. இப்பொழுது அந்த இடத்துக்கு அப் பெயரே வழங்குகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும், போத்துக்கீசர் காலத்தில் இடிக்கப்பட்டு பின்பு ஆங்கிலேயர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. கோபுரம் சில ஆண்டுகளுக்கு முன்புதான் கட்டி முடிக்கப்பட்டது.

## வினாக்கள்

(1) மாவிட்டபுரம் எங்கே அமைந்துள்ளது?

(2) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் யாரால் கட்டப்பட்டது?

(3) மாவிட்டபுரத்திற்குரிய தீர்த்தம் யாது?

(4) மாருதப்புரவீகவல்லிக்குக் குதிரை முகம் ஏற்பட்ட காரணம் யாது?

(5) கோயிலுக்குரிய விக்கிரகங்கள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன?

(6) மாவிட்டபுரம் என்ற பெயருக்கு காரணம் யாது?

(7) இவ்வாலயத்தில் எம் மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன?

(8) மாருதப்புரவீகவல்லியின் தந்தை யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16- ஆம் பாடம்

# அப்பர் சூலைநோய் தீர்ந்தது

இந்தியாவிலேயுள்ள திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே திருநாவுக்கரசர் அவதரித்தார். இவரது தந்தையார் புகழனார் என்பவர், தாயார் பெயர் மாதினியார். பெற்றோர்கள் மருணீக்கியார் என்ற நாமத்தைத் திருநாவுக்கரசருக்கு இட்டனர். இவரே அப்பர் சுவாமிகள் என்றும் அழைக்கப்படுவர்.

சிறு வயதிலே இவருடைய தாய் தந்தையர் இறந்து விட்டனர். தமக்கையாராகிய திலகவதியார் இவரை அன்புடன் பேணிப் பாதுகாத்து வந்தார்.

சில காலத்தின் பின் திருநாவுக்கரசர் தீவினை வசத்தால் சமண சமயத்திற் சேர்ந்தார். ஆனால் திலகவதியார் சைவ சமயத்திலேயே நெறி தவறாது ஒழுகி வந்தார். தம்பியார் சமண சமயத்திற் சேர்ந்த செய்தியை அறிந்து பெருங் கவலைகொண்டார். சிவபெருமானை வணங்கி, ''எனது தம்பி சைவ சமயத்தை திரும்பவும் கடைப்பிடிக்க அருள் புரிய வேண்டும்'' என்று அல்லும் பகலும் பிரார்த்தித்தார்.

சிவபெருமானுடைய திருவருளினாலே அப்பருக்குச் சூலைநோய் வந்தது. அந்நோய் அப்பர்

நா. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளின் குடலைக் குடைந்து குடைந்து மிகவும் வருத்தியது. இதனுற் பெருந் துன்பமடைந்தார் நாவுக்கரசர்.

சமண சமயத்தவர்கள் தங்களால் இயன்ற வைத்திய முறைகளைச் செய்தனர். மந்திரங்களைச் செபித்தனர். ஒன்றுமே பலிக்கவில்லை. அதற்கு மாருக நோய் வரவரக் கூடிக்கொண்டே சென்றது. சமணர்களும் ஒன்றும்செய்ய இயலாதென்று கூறிவிட்டனர்.

அப்பொழுது தான், அப்பருக்குத் தமக்கையாரின் நினைவு வந்தது; ஓர் ஆளிடம் நடந்த செய்தியைச் சொல்லித் தமக்கையாரிடம் தூது விட்டார் அப்பர்.

இதனைக் கேள்வியுற்ற திலகவதியார், "நான் அந்தப் பொல்லாத சமணர்கள் வாழுமிடத்துக்கு வரமாட்டேன்" என்று கூறித் தூதுவரைத் திருப்பி அனுப்பி விட்டார். சூலைநோயால் வருத்தமடைந்த அப்பர் சுவாமிகளின் உள்ளம் மாறுபட்டது; ஒருவருக்கும் தெரியாமல் சமணர் பள்ளியைவிட்டுத் தமக்கையாரின் இருப்பிடத்தைச் சென்று சேர்ந்தார். திலகவதியாரை வீழ்ந்து வணங்கித் தான் சூலை நோயால் வருந்துவதைப் பற்றி அழுதழுது கூறினர்.

திலகவதியார், மனம் இரங்கித் தன் தம்பியை அன்புடன் அணைத்து நெற்றியிலே திருநீறு பூசிச் சிவ மந்திரத்தை அவருக்கு உபதேசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர், தமக்கையாரின் கட்டளைப்படி திருவதிகையிலே வீற்றிருக்கின்ற வீரட்டானேசுவ ரரை வணங்கித் திருப்பதிகம் பாடினுர்: "கூற்ருயின வாறு விலக்ககிலீர்" என்ற முத லடியையுடைய தேவாரப் பதிகத்தை பாடிமுடிக் கச் சூலைநோயும் அப்பரைவிட்டு நீங்கியது. பின்பு அங்கிருந்து பல தலங்களுக்குஞ் சென்று தேவா ரங்கள் பாடி முத்தியடைந்தார். இவரியற்றிய தேவாரப் பாடல்கள் நான்காம், ஐந்தாம், ஆரும் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

## விஞக்கள்

(1) கீறிட்ட இடங்களை நிரப்புக.

(அ) திருநாவுக்கரசு நாயஞர் .................. நாட்டில் அவதரித்தார்.

(ஆ) இவருக்கு .............. என்று பெற்ருேர் நாம மிட்டனர்.

(இ) நாவுக்கரசர் ............... சமயத்திற் சேர்ந்ததால் திலகவதியார் கவலை கொண்டார்.

(2) அப்பருக்குச் சூலைநோயை வருவித்தது யார்?

(3) தூதுவரிடம் திலகவதியார் என்ன கூறி அனுப்பினுர்?

(4) திருநாவுக்கரசர் தமது முதலாவது தேவாரத்தை எந்தத் தலப் பெருமான் மீது பாடினுர்?

(5) திலகவதியரர் அப்பருக்கு எதனை உபதேசித்தார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17–ஆம் பாடம்

# பெரியபுராணம்

பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார் சுவாமிகள். இவர் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் பிறந்தவர். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு மந்திரியாக இருந்தவர். சைவ சமயத்தை மேலோங்கச் செய்வதற்காகத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றினர். இந் நூல் அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைக் கூறுகிறது. சேக்கிழார் சுவாமிகள் இந் நூலை எழுதுவதற்கு, “உலகெலாம்” என்னும் தொடரை எடுத்துக் கொடுத்தவர் சிவபெருமானே; சேக்கிழார் சுவாமிகள் அந்தத் தொடரை முதலாக வைத்துக் கீழ்க் காட்டிய புராணத்தைப் பாடினர். இது பெரிய புராணத்தின் கடவுள் வணக்கப் பாடலாக அமைந்துள்ளது.

திருத்தொண்டர் புராணம் பன்னிரு திருமுறைகளிற் பன்னிரண்டாவதாகும்.

### (1)

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:- உயர்ந்தோர் எல்லோரும் அறிந்து துதிப்பதற்கு அரியவனும், பிறைச் சந்திரனையும் அசைந்த கங்கா நதியையும் சடாமுடியிலே தரித்தவனும், அளவில்லாத சோதி வடிவானவனும், தில்லைச் சிற்றம்பலத்திலே ஆனந்த நடனமிடுபவனுமாகிய சிவபெருமானுடைய மலர்ந்த திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக.

குறிப்பு:- நிலவு - சந்திரன். நீர் - கங்கை. வேணி - சடாமுடி. சிலம்படி - ஒலிக்கின்ற அடி. சிலம்பணிந்த திருவடி; (நடனமிடும்போது, சிவபெருமானுடைய பாதங்களிலே கட்டப்பட்ட சிலம்புகள் ஒலிக்கின்றன.)

( 2 )

# கந்தபுராணம்

கந்தபுராணத்தை இயற்றியவர் கச்சியப்ப சிவாசாரியார் என்பவர். இவர் முருகப் பெருமானிடத்து மிகுந்த பத்தியுடையவர். இதன் நிமித்தமாகவே கந்தபுராணத்தை இயற்றினர். கந்தபுராணம் முருகப் பெருமானுடைய அருட் செயல்களை எடுத்து விரிவாகக் கூறுகிறது. கீழ் வரும் பாடல் கந்த புராணத்தில் பிள்ளையார் வணக்கமாக அமைந்துள்ளது.

திருச்சிற்றம்பலம்

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள் :- இந்த உலகத்திலே பிறவியினால் ஏற்படும் துன்பங்கள் நீங்கவும், நினைத்த காரியங்கள் இலகுவில் நிறைவேறவும், நெற்றிக் கண்ணையுடைய ஒப்பில்லாத யானையினது பெருமை பெற்ற முகத்தையுடைய தேவனான விநாயகப் பெருமானது தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி வாழ்த்துவோமாக.

குறிப்பு:- மாசற - துன்பம் நீங்க. முற்றுற - நிறைவேற. நுதல் - நெற்றி. களிறு - ஆண் யானை.

※ ※ ※

## 18 - ஆம் பாடம்

# திருக்கோயில்களைத் தூய்மையாக வைத்திருத்தல்

பிள்ளைகளே, நாங்கள் வசிக்கும் வீடுகளைப் பாருங்கள். அவற்றை நாம் தினந்தோறும் கூட்டிச் சுத்தம் செய்கிறோமல்லவா, ஏன்? சுத்தமான வீடுகளைத்தான் யாரும் விரும்புவர். அவற்றிலும் மேலாக, நம் கோயில்களைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். தூய்மையான ஆலயங்களிலே தான் இறைவனின் நிறைந்த அருளைப் பெற முடியும்.

முன்னொரு பாடத்தில், கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யும் முறையைப் பற்றிப் படித்தோம். வழிபாட்டோடு மாத்திரம் நின்றுவிடுதல் கூடாது. சிவத் தொண்டுகளையும நாம் செய்தல் வேண்டும். அவற்றில் கோயிலைச் சுத்தமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருத்தல் ஒரு சிறந்த சிவத் தொண்டாம். கோயிலின் சுற்றுப் புறங்களை வீதிகள் என்று கூறு கிறோம். இந்த வீதிகள் சுத்தமாக இருக்க வேண் டும். அங்கே காணப்படும் புல் பூண்டுகளை அகற்ற வேண்டும். குப்பை கூளங்களைக் கூட்டித் துப்புரவு செய்தல் வேண்டும் வீதிகளுக்கு வெண்மணல் பரப்பி அழகு செய்ய வேண்டும். திருநாவுக்கரசு சுவாமிகள், உழவாரப் படைகொண்டு கோயிற் சுற்றுப் புறங்களிலுள்ள புல் பூண்டுகளை நீக்கியும், கடவுளை வழிபட்டும், தேவாரம் பாடியும் பல்வேறு திருப்பணிகளைப் புரிந்து சிவனடி சேர்ந்தார்.

கோயிலின் உள் வீதிகளும் மண்டபங்களும் எந்நேரமும் தூய்மையாக இருத்தல் வேண்டும். அங்கே பலரும் வந்து வழிபாடுகள் செய்வதாலும் பூசைகளும் விழாக்களும் தினந்தோறும் நடை பெறுவதாலும், அடிக்கடி குப்பை கூளங்கள் சேரு வது இயல்பே. இவற்றை உடனுக்குடன் கூட்டித் துப்புரவு செய்தல் வேண்டும். அழுக்குகளைத் தூரத்தில் எறிதல் வேண்டும். வீதிகளுக்கு மஞ்சள் நீர் அல்லது சாண நீர் தெளித்தல் வேண்டும். கோயில் மண்டபங்களுக்கு நீர் ஊற்றிக் கழுவுதல் வேண்டும். கோயிலின் வெளி வாயில்களின் முற் புறத்தைச் சாணத்தினல் மெழுகி அரிசி மாவினல் கோலமிடலாம். கோயிலுக்குரிய விளக்குகள், நீர்க்குடங்கள், தீபக் கருவிகள் ஆகியவற்றைத் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்து உதவுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் சுவாமிகளின் தமக்கையாராகிய திலக வதியார் இப்படியான கோயிற் பணிகளைச் செய்து முத்தியடைந்தார்.

பிள்ளைகளே, நாங்கள் ஒவ்வொருவரும் தினந் தோறும் சிறிது நேரத்திற்காவது கோயிற்றொண்டு களைச் செய்யப் பழகல் வேண்டும். இதனால் இறை வனுடைய பேரன்பிற்கு நாம் உரியவராவோம்.

'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே.''

(அப்பர் தேவாரம்)

## வினாக்கள்

(1) தலைசிறந்த சிவத்தொண்டு எது ?

(2) கோயில் வெளிவீதியை எவ்வாறு சுத்தம் செய்யலாம் ?

(3) உழவாரப்படை கொண்டு பணி புரிந்தவர் யார் ?

(4) கோயிலைச் சுத்தம் செய்வதில் வாழ்நாளைக் கழித்த பெண்மணி யார் ?

(5) உள் வீதிகளுக்கு எவ்வகையான நீர் தெளிக்கலாம் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 - ஆம் பாடம்

# சுந்தரரைத் தடுத்தாட் கொண்டமை

பிள்ளைகளே, முன்னொரு பாடத்தில், சுந்தர மூர்த்தி நாயனாரைப் பற்றிச் சுருக்கமாக அறிந்தோம். சிவபெருமானுடைய திருவருளினாலே இவர் சடையனாருக்கு இசைஞானியார் வயிற்றில் உற்பவித்தார். பிறந்து சிறு குழந்தையாக விளையாடித் திரியும் பருவத்திலே நரசிங்கமுனையர் என்னும் மன்னரால் எடுத்து வளர்க்கப்பட்டார். இதனால் இளமையிலேயே நன்கு கல்வி கற்றார். உரிய பிராயத்தை அடைந்தபோது, அவருக்கு விவாகஞ் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெற்றன. புத்தூரிலுள்ள சடங்கவி சிவாசாரியாருடைய மகளையே மணப்பெண்ணாகப் பெரியோர் தெரிவு செய்தனர்.

கலியாண சுபநேரமும் நெருங்கியது. சுந்தரர் அழகிய மணக்கோலத்துடன் மணமகனாகப் பெண் வீட்டுக்குச் சென்று மணப் பந்தலிலே உட்கார்ந்தார்.

அப்பொழுது அங்கே ஒரு கிழப் பிராமணர் வந்தார். அவர் நரைத்த சடையும் சரிந்த தொந்தியும் உடையவராய்த் தடியொன்றை ஊன்றியவராய், வயதில் முதிர்ந்தவராய்க் காணப்பட்டார். 'அப் பிராமணர் யார்' என்பதை அங்கிருந்த எவரேனும் அறியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கிழப் பிராமணர் அங்கிருந்த சபையோரைப் பார்த்து, "எனக்கும் இந்த மணமகனுக்கும் ஒரு வழக்கு இருக்கிறது; அதைத் தீர்த்த பின்பே அவன் விவாகஞ் செய்தல் வேண்டும்" என்று கூறினர். சபையோர் அனைவரும் திகைத்தனர். மணமகன் அதனைக் கேட்டு, "எனக்கும் உமக்கும் என்ன வழக்கு இருக்கிறது? அப்படி இருந்தால் அதைத் தீர்த்த பின்பே நான் விவாகஞ் செய்வேன். முதலில் உமது வழக்கைச் சொல்லும்" என்றார்.

உடனே கிழப்பிராமணர் சுந்தரரைப் பார்த்து "நீ என்னுடைய அடியவன்; ஆகையால் என்னுடைய வேலைகளைச் செய்ய வேண்டும்" என்றார். சுந்தரருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஐயரே, பிராமணருக்குப் பிராமணன் அடிமையானது எங்கேனும் உண்டா? நீர் யார்? பித்தனைப் போற் பிதற்றுகிறீரே!" என்று கேட்டார்.

"நான் பித்தனுமல்லன்; பேயனுமல்லன்; உமது பாட்டனுரால் எழுதப்பட்ட ஓலை இதோ இருக்கிறது; பாரும்" என்று ஓர் ஓலையை நீட்டினர் பிராமணர். சுந்தரர் கோபத்துடன் அவ்வோலையைப் பறித்துக் கிழித்து எறிந்தார்.

"சபையோரே, இது என்ன அநீதி! இது முறையோ! தருமமோ!" என்று ஓலமிட்டார் பிராமணர். "இதனைக் கிழித்தாற்போல் இவன் தப்பிவிட முடியாது; இவனுடைய பாட்டன் எனக்கு எழுதித் தந்த மூல ஓலை என்னிடமுண்டு; அதனைக் காட்டி எனது வழக்கை நிரூபிப்பேன்" என்று திருவெண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ணெய் நல்லூரரை நோக்கிச் சென்றார். அவர் பிறகே நம்பியாரூரருந் தொடர்ந்து சென்றார் திருவெண்ணெய் நல்லூர் அந்தணர்களின் முன் இவ்வழக்கை மெய்ப்பிக்கச் சென்ற கிழவர் அந்தணரிடம் தான் வைத்திருந்த மூல ஓலையைக் காட்டி வழக்குரைத் தார். அதிலிருந்த கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்தபோது சரிபாகக் காணப்பட்டது. "இது சுந்தரரின் பாட்டனாருடைய கையெழுத்துத்தான். ஆகவே, சுந்தரர் இந்தப் பிராமணருக்கு அடிமை தான்" என்று திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் தீர்ப்புக் கூறினர்.

சுந்தரமூர்த்திநாயனர் பிராமணரைப் பார்த்து "ஐயா நீர் யார்? உமது வீடு எங்கேயிருக்கிறது?" என்று கேட்டார். கிழவர் தமது வீட்டைக் காட்டு வதாகக் கூறி, எல்லோரையும் அழைத்துக்கொண்டு சென்று, திருவெண்ணெய் நல்லூர் கோயிலுக்குட் புகுந்தார். புகுந்த பிராமணர் திடீரென மறைந்து விட்டார். அங்கு நின்றவரனைவரும் திகைத்தனர்; சுந்தரமூர்த்தி நாயனர் பேராச்சரியமடைந்தார். அப்பொழுது அசரீரியாக "சுந்தரனே. நானே உன்னைத் தடுத்தாட் கொண்டேன்; நீ என் மேல் தோத்திரங்கள் பாடி வணங்கு" என்று ஆகாயத் திலிருந்து ஒரு சத்தம் கேட்டது.

சிவபெருமான், தன்னை வந்து தடுத்தாட் கொண்ட திறத்தை நினைந்து பேரானந்தமடைந் தார் சுந்தரர்; "பெருமானே. உம்மை எப்படிப் பாடுவேன்?" என்று இரந்து கேட்டார். அப்போது சிவபெருமான் அம்மையாரோடு இடபவாகனத்தின் மேல் தோன்றி, "சுந்தரனே முன்பு நீ என்னைப் பித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனென்ருய்; ஆதலால் 'பித்தா' என்றே பாடு'' என்று அருளிச் செய்தார். சுந்தரமூர்த்தி நாயனர் ''பித்தா பிறை சூடி பெருமானே'' என்ற தொடக்கத்தையுடைய தேவாரத்தைப் பாடியருளினர்.

நாயனர் பின்பு பல தலங்களுக்குஞ் சென்று சிவபெருமானை வணங்கித் தேவாரங்கள் பாடியருளினர். கடைசியாகச் சிவபெருமானுல் அனுப்பப் பட்ட வெள்ளை யானையின் மேலேறித் திருக்கயிலாயஞ் சேர்ந்தார். இவர் பாடிய தேவாரப் பதிகங்கள் ஏழாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன.

## வினக்கள்

(1) சுந்தரமூர்த்தி நாயனர் யாரால் வளர்க்கப்பட்டார்?

(2) கிழப் பிராமணராக எழுந்தருளியவர் யார்?

(3) 'முதலில் உமது வழக்கைச் சொல்லும்' — இது யார் கூற்று?

(4) யார் முன்னிலையில் இவ் வழக்கு விசாரிக்கப்பட்டது?

(5) திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலுக்குள் மறைந்தவர் யார்?

(6) கீறிட்ட இடங்களை நிரப்புக;

(அ) சுந்தரமூர்த்திநாயனர் .................... வயிற்றில் உற்பவித்தார்.

(ஆ) சிவபெருமான் ...... நாயனரை.........பற்றவிலே தடுத்தாட்கொண்டார்.

(இ) ............என்ற தொடக்கத்தையுடைய தேவாரத்தைச் சுந்தரமூர்த்திநாயனர்...............முதன் முதலாகப் பாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 - ஆம் பாடம்

# அருணகிரிநாதர் திருப்புகழ்

இந்தியாவிலுள்ள திருவண்ணமலையிலே, ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன் அருணகிரிநாதர் அவதரித்தார் இவர் முருகப்பெருமானிடத்து மிகுந்த பக்தி உள்ளவர். இளமைப் பருவத்திலேயே, நெறியல்லா நெறியில் சென்றமையால், பல கொடிய நோயினாலும் வறுமையினாலும் வருந்தினர். தம் குறையை முருகப் பெருமானிடம் முறையிட்டார். முருகப் பெருமான் அவருக்கு இரங்கி, அவர் செய்த பிழைகளைப் பொறுத்து, முன்பு தோன்றி அவர் நோயை நீக்கி, ஞானமார்க்க அறிவைக் கொடுத்து மறைந்தருளினர். அன்று தொடக்கம் அருணகிரிநாதர் ஆலயங்கள் தோறும் சென்று முருகப் பெருமான் மீது இனிய சந்தங்களமைந்த பத்திப் பாடல்களைப் பாடி வணங்கினர் இப்பாடல்களே திருப்புகழ் எனப்படுகின்றன.

இவர் இலங்கையிலுள்ள கதிர்காமக் கந்தன் மீதும் திருப்புகழ் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1)

## கதிர்காமம்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

இதன் பொருள்: வள்ளிநாயகியாரின் நாயகரே! குகனே! குமரேசனே! உரல்போன்ற காலையுடைய யானையின் முகத்தையுடையவராகிய விநாயகருக்கு இளையபெருமானே! நான் இனிமேல் இறவாமலும் பிறவாமலும் நீரே என்னை யாளும் நல்ல குருவாகியும் பிறவாகியும் வந்து முத்தியாகிய பெருவாழ்வைத் தருவீராக.

குறிப்பு: கறை-உரல்போன்ற கால். குறமாது - வள்ளி நாயகியார். திரம் - (ஸ்திரம்)- அழிவற்றது. இளையோன்-தம்பி.

(2)

## சுவாமி மலை

சுவாமிமலை என்பது சோழ நாட்டிலுள்ள திருத்தலங்களுள் ஒன்று. இதனைத் திருவேரகம் என்றும் கூறுவர். முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளில் இதுவுமொன்றாகும். இங்கே எழுந்தருளியிருக்கும் முருகனுக்குச் சுவாமி நாதன் என்று பெயர். தந்தையாராகிய சிவபெருமானுக்குக் குழந்தையாகிய முருகன் பிரணவத்தை உபதேசித்தபடியால் அப்பெயரைப் பெற்றார். கீழே காட்டப்படும் திருப்புகழ் இத்தலத்திலுள்ள முருகன் மேல் பாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான தனதன தான தனதன
தான தனதன — தனதான

பாதி மதிநதி போதும் அணிசடை
நாதர் அருளிய — குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய — மணவாளா
காதும் ஒருவிழி காகம் உறஅருள்
மாயன் அரிதிரு — மருகோனே
காலன் எனைஅணு காமல் உனதிரு
காலில் வழிபட — அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு — சிறைமீளா
ஆடு மயிலினில் ஏறி அமரர்கள்
சூழ வலம்வரும் -- இளையோனே
சூதம் மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் — உறைவோனே
சூரன் உடலற வாரி சுவறிட
வேலை விடவல — பெருமாளே.

இதன் பொருள் :- மூன்றாம் பிறைச் சந்திரனையும் கங்கையையும் கொன்றை மலர் மாலையையும் சூடியிருக்கின்ற சடா முடியையுடையவராகிய சிவபெருமான் பெற்ற இளமையான திருவருட் செல்வனே, வெல்லப் பாகினையும் முப்பழச் சுவையினையுமொத்த மொழிகளைப் பேசுகின்ற குறமகளாகிய வள்ளிநாயகியாரின் பாதங்களைத் தடவிய மணவாளனே!

காக்கைக்கு ஒற்றைக் கண் கெட்டு ஒழியும் வண்ணம் அருள்செய்த திருமாலினது அழகிய மருமகனே! பிரமதேவருடனே மற்றத்தேவர்களும் வானுலகத்தை ஆளுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிசெய்து பிரமதேவரின் சிறையை மீட்டு விடுவித்து தேவர்கள் சூழ ஆடும் மயிலினிலே அமர்ந்து உலாவி வரு கின்ற முருகப்பெருமானே !

மாமரங்கள் மிக வளர்ந்திருக்கின்ற சோலைகளையுடைய சுவாமி மலையென்னும் திருப்பதியிலே எழுந்தருளி இருப்ப வனே ! சூரபன்மனது உடம்பு சிதையவும் கடல்நீர் வற்றிப் போகவும் வேற்படையைச் செலுத்தவல்ல பெருமை மிக்க வனே !

இயமனுனவன் என்னை நெருங்கி வராமல் உனது இரண்டு திருவடிகளையும் போற்றி வணங்குவதற்குத் திரு வருள் புரிவாயாக.

குறிப்பு: பாதிமதி - பிறைச்சந்திரன். பாகு-சர்க்கரைப் பாகு. கனி - முக்கனி. (மா, பலா, வாழை) சூதம்-மாமரம் அயன் - பிரமா. வாரி - கடல்.

※ ※ ※

## 21 - ஆம் பாடம்

# பூந்தோட்டம்

திருக்கோயில்களிலே நடைபெறும் பூசைகளுக் கும் விழாக்களுக்கும் பலவிதமான பூக்கள் பயன் படுகின்றன. சிவபெருமானுடைய திருவடிகளுக்கு இப்பூக்களை இட்டு வழிபாடுகள் நடத்துகிறார்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான இப் பூக்களைப் பெறுவதற்குப் பூந்தோட்டங்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இதுவும் சிறந்த ஒரு சிவ தொண்டாகும்; தூய்மை யானதும் மேடானதுமான இடத்திலேயே இப்பூந்தோட்டம் அமைக்கப்பட வேண்டும். செடி கொடிகள் செழுமையாக வளரக் கூடிய நிலத் தன்மை அங்கு அமைந்திருக்க வேண்டும்.

பூந் தோட்டத்திலே கண்ட கண்ட பூ மரங் களையெல்லாம் நாட்டுதல் கூடாது. சிவபெருமா னுடைய அர்ச்சனைக்குத் தேவையான வில்வம், கொன்றை, ஆத்தி, தும்பை, மருக்கொழுந்து, முல்லை, மல்லிகை, செவ்வரத்தை, சண்பகம் முதலிய பூச்செடி கொடிகளையே அங்கு உண் டாக்கி வளர்த்தல் வேண்டும். மழையில்லாத காலங்களில் தினந்தோறும் நீரூற்றுதல் வேண்டும். காலை நேரங்களில் நீரூற்றுதலே சிறந்தது.

பூந் தோட்ட வேலை சிறந்த ஒரு பொழுது போக்காகும்; பெரியதோர் திருத்தொண்டாகும். பூந் தோட்டங்களுட் பிரவேசிக்கும் போது தூய் மையான முறையிலேயே நாம் செல்லுதல் வேண் டும். பாதரட்சைகள் போட்டுக்கொண்டு போகக் கூடாது. பூக்களைக் கொய்யும் போது தவறிக் கீழே விழுந்த பூக்களை எடுக்கக் கூடாது.

கொய்த பூக்களை பூக்குடலைகளிலேனும் தட் டுக்களிலேனும் கோயிலுக்குக் கொண்டு சென்று, சொரி பூக்களாகவும், மாலைகளாகவும் சுவாமிக் குச் சாத்தலாம். சுவாமிக்கு வேண்டிய பூக்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்வதற்கும் பூந்தோட்டம் செய்தல் பெரும் பயன் உடையதாகும்.

சோழ நாட்டிலே இருந்த சிவகாமியாண்டார் என்னும் சிவனடியார் ஒருவர் பூத்தொண்டு புரிந்து சிவபதம் அடைந்தார். முருக நாயனார் என்னும் திருத்தொண்டர் பலவகையான மாலைகளைக் கட்டி இறைவனுக்குச் சாத்தி, அதனால் முத்தியடைந்தவர். அதேபோல் நாமும் இப்படியான திருப்பணிகளைச் செய்து முத்தியடைவோமாக.

## வினாக்கள்

(1) எப்படியான பூச்செடிகளை நடுதல் வேண்டும் ?

(2) பூத்தொண்டு புரிந்த சிவனடியார் யார் ?

(3) எத்தகைய இடத்திலே பூந்தோட்டம் அமைக்க வேண்டும் ?

(4) பூக்கள் எவ்வகையில் பயன்படுகின்றன ?

(5) கீறிட்ட இடங்களை நிரப்புக :

(அ) பூச்செடிகளுக்கு காலை நேரங்களில் ......... சிறந்தது.

(ஆ) பூந்தோட்ட வேலை சிறந்த ஒரு ..........

(இ) .........பூக்களை சொரி பூக்களாகவும் மாலைகளாகவும் ......... சாத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22-ஆம் பாடம்

# செம்மனச் செல்வியார்

பாண்டி நாட்டின் தலை நகராக அமைந்தது மதுராபுரி. இதனைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய மன்னர்கள் பலகாலம் அரசியற்றி வந்தார்கள். அவ்வரசர்களில் அரிமர்த்தன பாண்டியன் என்பவனுமொருவன்.

மதுரையிலே, இம் மன்னன் அரசாட்சி செய்யுங் காலத்தில் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் மிகவும் ஏழை. சுற்றத்தவர் எவரும் இல்லாதவள் பிட்டு விற்று அன்றாடச் சீவியம் நடாத்துபவள். அவளுக்கு 'வந்தி' என்ற மறு நாமமும் உண்டு.

ஒருமுறை பாண்டிய மன்னன் மாணிக்கவாசகருக்குச் செய்த தண்டனையின் காரணமாகச் சிவபெருமான் வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்தார். வைகை நதி மதுரையின் பக்கமாகவே பாய்கிறது. அது பெருகியதால் அவ்வூர்ச் சனங்கள் பெரிய துன்பத்துக்குள்ளாயினர். வீடு இழந்தோரும், ஆடு மாடுகளை இழந்தோருமாக மக்கள் அவதிப்பட்டனர். அச் செய்தியை அறிந்த அரிமர்த்தன பாண்டியன், வைகை நதிக்கு அணைகட்டும்படி அவ்வூர்ச் சனங்களுக்குக் கட்டளையிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் ஒவ்வொரு பங்கு அளந்து விடப்பட்டது. மக்கள் எல்லோரும் அரசன் ஆணையைத் தலைமேற் கொண்டு தமக்குரிய பங்குகளுக்கு அணை கட்டுவதற்காக வைகைக் கரைக்கு வந்தார்கள். செம்மனச் செல்வி என்னும் மூதாட்டிக்கும் ஒரு பங்கு அளந்து கொடுக்கப்பட்டது. ஆனால் கிழவியால் அணைகட்ட முடியவில்லை. என்றாலும் தனது கடமையையும் அரசனுடைய கட்டளையையும் நிறைவேற்ற நினைத்து கூலியாட்களைத் தேடி அலைந்தாள்.

ஒருவரைத் தவிர இந்த உலகத்திலேயே அம்மையாரின் முறையீட்டுக்குச் செவி கொடுப்பவர் வேறு எவருமேயில்லை. அவர்தான் சிவபெருமான். அவரின் துணை தனக்கு உண்டு என்ற நம்பிக்கையோடு மதுரைச் சொக்கநாதர் கோயிலுக்குச் சென்றாள். "எம்பெருமானே! எனக்குத் தாய், தந்தை, சுற்றம், எல்லாம் நீரே! ஏழையேனுக்கு உதவி புரிய இவ்வுலகில் வேறு யார் இருக்கிறார்? எனது மனத் துன்பத்தை நீரே நீக்கியருள வேண்டும். இல்லாவிட்டால் நான் உயிர் விடுவதல்லாமல் வேறு வழி காணேன்" என்று கண்ணீர் சொரிய விழுந்து அழுதாள்.

அன்பர்கள் வேண்டியபோது வேண்டியவாறு உதவி புரிபவரல்லவா் சிவபெருமான்! செம்மனச் செல்வியாரின் பிரலாபம் அவரது திருச்செவிகளிற் பட்டது. கிழவியின் துன்பத்தை நீக்க நினைத்து தானே கூலியாள் வேடம்பூண்டு, கூடையைத் தலைமேலும் மண்வெட்டியைத் தோள் மேலும் தாங்கிக் கொண்டு கோயில் வாயிலிலே வந்து நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூலிகொள்வாருண்டோ?" என்று உரத்துக் கூவினார். செம்மனச் செல்வியார் இதனைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தவராய் அவர் முன்னிலையிற் சென்று "வைகைக் கரையில் என்னுடைய பங்கை அடைத்துத்தா. அதற்குக் கூலியாக இன்று பிட்டு விற்றுக் கிடைக்குங் காசு முழுவதையும் உதிர்ந்த பிட்டு முழுவதையும் உனக்குத் தருகின்றேன்" என்றார்.

கூலியாள் அதற்குச் சம்மதித்து அவளோடு சென்றார். "எமக்குப் பசியாக இருக்கிறது" என்று கூறிக் கிழவியிடம் உதிர்பிட்டினை வாங்கி முதலில் உண்டார். உண்ணும்போது, "அம்மா, உனது பிட்டு மிக நன்றாயிருக்கிறது" என்று சொல்லிச் சொல்லிச் சாப்பிட்டார்.

பிட்டை உண்டபின் கரையை அடைப்பதற்காகச் சென்றார். எனினும் வேலையை ஊக்கமொடு செய்தாரில்லை. சிறிது நேரம் ஆடுவார்; பின்பு நின்று பாடுவார். மடியில் உள்ள பிட்டை உண்பார். கூடையில் சிறிது மண் எடுத்துப் போய்க் கரையில் கொட்டுவார். இளைத்து நிற்பார். மேட்டிற்கு மண் போடுவார். பள்ளத்திலிருந்து இன்னும் மண்ணை வெட்டி எடுப்பார். ஈற்றில் கூடையைத் தலையின்கீழ் வைத்து மரநிழலில் உறங்குவார் இப்படியான பல திருவிளையாடல்களைச் செய்து கொண்டிருந்தபடியால் குறித்த நேரத்தில் கரை முற்றுப்பெற அடைக்கப்படவில்லை. காவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளர்கள் வந்து பார்த்தபோது செம்மனச்செல்வி யாரின் கரைப் பங்கு அடைபடாமல் இருப்பதைக் கண்டனர். கோபத்தோடு சென்று இச்செய்தியைப் பாண்டியனுக்கு அறிவித்தனர். அரசனும் கூலியாளைத் தன் முன்னிலையில் அழைப்பித்துப் பிரம்பால் அடித்தான். அவ்வளவில் சிவபெருமானாகிய கூலியாள் ஒரு கூடை மண்ணை உடைப்பிலிட்டு மறைந்தருளினார் வைகைக் கரையும் அடைபட்டது. பாண்டியன் அடித்த அடி சர்வ ஆன்மாக்கள் மேலும் பட்டது. எல்லாருந் திகைத்தனர். செம்மனச் செல்வியார் தம் கூலியாளுக்கு என்ன நேர்ந்தது என்று ஏங்கிக் கொண்டிருந்த போது தேவ தூதர்கள் அவ்விடம் வந்து பொன் விமானத்தில் அவரையேற்றிக் கைலாயம் கொண்டு சென்றனர்.

பிள்ளைகளே! செம்மனச் செல்வியாரைப் போன்று நாமும் சிவபெருமானிடத்து அன்புடையவர்களாக இருந்தால் எமக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படமாட்டாது.

### வினாக்கள்

(1) செம்மனச் செல்வியார் எந்த அரசன் காலத்திலே வாழ்ந்தார்?

(2) வைகை பெருக்கெடுத்ததேன்?

(3 செம்மனச் செல்வி யாரிடம் சென்று முறையிட்டார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) கரையை அடைக்கச் சென்ற கூலியாள் செய்த திருவிளையாடல்கள் எவை ?

(5) கூலியாளுக்கு அடித்த அடி யார்மேற் பட்டது ?

(6) செம்மனச் செல்வியின் மறுபெயர் என்ன ?

## 23 - ஆம் பாடம்



# விநாயகக் கடவுள்

திருமூலர் அருளிச் செய்த

## திருமந்திரம்

10-ஆந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தின் விநாயகர் காப்புச் செய்யுளாம். இத் திருமுறையைப் பாடியவர் திருமூல நாயனுர்.

இதன் பொருள்:— ஐந்து திருக்கரங்களை உடையவரும், யானை முகத்தை உடையவரும், பிறைச் சந்திரனைப் போன்ற தந்தத்தினை உடையவரும், சிவபெருமானுடைய மூத்த புதல்வரும், வளரும் ஞான வடிவினருமாய விநாயகப் பெருமானை நான் மனத்திலே இருத்தி அவர் திருவடியை வணங்குகின்றேன்.

குறிப்பு:— கரம் - கை. இந்து - சந்திரன். எயிறு-பல். நந்தி-சிவபெருமான். ஞானக்கொழுந்து - வளரும் ஞானம் புந்தி - மனம்.

## 24 - ஆம் பாடம்
# நீதிப் பாடல்கள்

## வாக்குண்டாம் (மூதுரை)

ஒளவையார் என்னும் பெண்பாற் புலவர் பல நீதி நூல்களை இயற்றியுள்ளார். அவையாவன: ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்பனவாம். இவை பல புத்திமதிகளை எமக்கு எடுத்துப்புகட்டுகின்றன. சிறு பிள்ளைகளும் படித்து அறிதற்கேற்ற முறையில் அப் பாடல்கள் அமைந்துள்ளன. கீழே காட்டப்படும் பன்னிரண்டு பாடல்களும் வாக்குண்டாம் என்னும் நீதிநூலிலே யுள்ளவை. முதலில், பிள்ளையார் வணக்கம் கூறப்பட்டுள்ளது. வாக்குண்டாம் என்னும் நீதி நூலுக்கு மூதுரை என்னும் பெயருமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

இதன் பொருள்:— பவளம் போன்ற சிவந்த திருமேனியையும் தும்பிக் கையையு முடைய விநாயகப் பெருமானது திருவடிகளைத் தினந்தோறும் தவறாமற் சென்று வணங்குவோருக்குச் சொல்வன்மை உண்டாகும். சிறந்த நினைவுகள் உண்டாகும். அழகிய செந்தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற இலக்குமிதேவியின் அருட்பார்வையுண்டாகும். அவர்களின் உடம்பு பலவிதத் துன்பங்களால் வருந்தி வாட்டமடையாது.

பொழிப்பு:— விநாயகப் பெருமானை வணங்குவோருக்கு கல்வி, செல்வம், நோயின்மை முதலிய நற்பலன்கள் உண்டாகும்.

குறிப்பு :— நோக்கு - பார்வை. துப்பு - பவளம். நுடங்காது - வாட்டமடையாது.

⁂

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

இதன் பொருள்:— நிலத்திலே நிலைபெற்று உறுதியாக வளர்ந்து வருகின்ற தென்னை மரமானது, தனது வேரினால் உட்கொண்ட தண்ணீரை, தனது தலையாலே காய்க்கும் இளநீராகத் தருகிறது. அதுபோல, நற்குணமுள்ள ஒருவனுக்கு

நன்மையான உதவியைச் செய்தால் அவ்வுதவிக்கு ஏற்ற வேறு உதவியை அவன் எப்போது திருப்பிச் செய்வான் என்று நாம் சந்தேகப்படவேண்டியதில்லை. அவன் கட்டாய மாகவே திருப்பிச் செய்வான்.

பொழிப்பு:— நற்குணமுள்ள ஒருவனுக்கு நாம் ஓர் உதவியைச் செய்தால் அவன் எப்போதாவது ஒருமுறை அவ்வுதவியை எமக்குத் திருப்பிச் செய்தே தீருவான்.

குறிப்பு:— தெங்கு-தென்னை மரம். தாள்-அடி, வேர்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே — அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

இதன் பொருள்:— நல்லவர்களுக்குச் செய்த உதவியானது கருங்கல்லின்மீது வெட்டப்பட்ட எழுத்துப்போல அழிவில்லாமல் விளங்கும். நல்லார் அல்லாத இரக்கமற்ற மனமுடையவருக்குச் செய்த உதவியானது நீரின்மேல் எழுதப்பட்ட எழுத்துப்போல் அழிந்துவிடும்.

பொழிப்பு:— நல்லவர்களுக்குச் செய்த உதவி நிலைத்து நிற்கும். தீயவர்களுக்குச் செய்த உதவி உடனே அழிந்து போகும்.

குறிப்பு:— ஈரமில்லாத-இரக்கமில்லாத. ஈந்த-செய்த. நேர்-ஒப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னு இளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னு அளவில் இனியவும் — இன்னுத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்(கு) அழகு.

இதன் பொருள்: இன்பம் அடைவதற்கேற்ற இளமைப் பருவத்தில் வறுமையானது வந்து சேருமானுல் அது துன்பத்துக்கே இடமானதாகும்; துன்பத்திற்கிடமான முதுமைப் பருவத்தில் செல்வம் வந்து சேருமானுல் அதுவும் துன்பத்துக்கே இடமானதாகும்; அவைகள் காலமல்லாத காலத்திலே பூத்த பூவினையும், கணவனில்லாத இளம் பெண்ணுக்கு வாய்த்த அழகினையும் ஒத்தனவாம்.

பொழிப்பு: இளமையில் வந்த வறுமையும், முதுமையிற் பெற்ற செல்வமும் துன்பத்திற்கிடமானவையேயாம்.

⁂

அட்டாலும் பால்சுவையிற் குன்று(து) அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

இதன் பொருள்: பாலை நன்முக வற்றக் காய்ச்சினுலும் அது தனக்குள்ள இனிப்புச் சுவையில் குறைந்து போகாது. சங்கினைச் சுட்டு நீருக்கினுலும் அது தனக்குரிய வெண்ணிறமே கொடுக்கும். அதுபோல மேலானவர்கள் வறுமையில் மெலிந்தாலும் மேன்மையாங் குணமுடையவராகவே இருப்பர். நட்புக்குணமில்லாத கீழ்மக்கள் ஒன்று கலந்து நட்புகொண்டாலும் நட்பாகமாட்டார்கள்;

பொழிப்பு:- மேலானவர் வறுமையடைந்தாலும் மேன்மைக் குணமுடையவராகவே காணப்படுவர். கீழோர் கலந்துறவாடினுலும் நட்பாகமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: அட்டாலும் - காய்ச்சினும்; குன்றுது - குறையாது.

※ ※ ※

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்க ளாகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

இதன் பொருள்: கிளைகள் நிறைந்த உயர்ந்த மரங்கள் எல்லாம் தத்தமக்குரிய பருவகாலங்களில் அல்லாமல் காய்ந்துப் பழுக்கமாட்டா. அதுபோல அடுத்தடுத்து முயற்சி செய்தாலும் ஒரு காரியம் முடிகின்ற காலத்தில் அல்லாமல் முடியமாட்டா.

பொழிப்பு: எந்தக் காரியங்களும் அவை முடியும் காலம் வந்தாலல்லாமல் முடியமாட்டா. ஆகவே காலமறிந்தே எதையும் செய்தல் வேண்டும்.

※ ※ ※

உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ — கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கில்
தளர்ந்து வளையுமோ தான்.

இதன் பொருள்: கருங்கல் தூணனது பெரிய சுமையைத் தாங்குமானல் வெடித்து உடைந்து போவதன்றித் தான் தளர்வுற்று வளையுமோ? வளையாது. அதுபோல மானக்குறைவு நேர்ந்த இடத்திலே தம் உயிரைக் கொடுக்கின்ற பெருந்தன்மை வாய்ந்தவர்கள் பகைவரைக் கண்டவிடத்தில் வணங்குவாரோ? வணங்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்பு:- மானத்தைக் காக்கும் தன்மையுடையோர் தன் பெருமைக்குக் குறைவு நேர்ந்தால் தம்முயிரை விடுவரே அன்றி மானத்தை விடார்.

✕ ✕ ✕

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு — மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகுங் குணம்.

இதன் பொருள்:- நீரில் உண்டாகும் ஆம்பற் பூவானது நீரினது உயரத்தினளவாகவே இருக்கும். கூர்மையான அறிவு தான் கற்று அறிந்த அரிய நூல்களின் அளவாகவே உண்டாகும். ஒருவன் அடைந்த செல்வப் பொருள் முற்காலத்தில் செய்த தவத்தினது அளவாகவே இருக்கும். ஒருவனது குணம் தான் பிறந்த குடியின் தன்மையினதாகவே இருக்கும்.

பொழிப்புரை:- ஒருவனுக்கு அறிவுதான் படித்தறிந்த நூலினளவாகவும், செல்வம் முற்பிறப்பிற் செய்த தவத்தின் அளவாகவும், குணம் தான் பிறந்த குடிப்பிறப்பின் அளவாகவும் உண்டாகும்.

✕ ✕ ✕

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே — நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

இதன் பொருள்:- நல்ல பண்புள்ளவரைப் பார்ப்பதும் நன்மையே. நல்லவருடைய சொற்களைக் கேட்பதும் நன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையே. நல்லோருடைய நல்ல பண்புகளை அடிக்கடி பேசுவதும் நன்மையே; அந்த நல்லோருடனே நட்புக்கொண்டிருத்தலும் நன்மையே.

பொழிப்பு:- நல்லாரைக் காண்பதுவும், அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர் குணங்களைப் பேசுவதும் அவரோடு கூடி வாழ்வதும் நன்மையே தரும்.

குறிப்பு:- இணங்கி - நட்புக் கொண்டு

⁂ ⁂ ⁂

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே — தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவுந் தீது.

இதன் பொருள் :- கெட்ட குணமுள்ளவரைப் பார்ப்பதும் தீமையே. அவருடைய பயன் இல்லாத சொற்களைக் கேட்டலும் தீமையே! கெட்டவர்களுடைய கெட்ட குணங்களை எடுத்துச் சொல்லுதலும் தீமையே. அவரோடு நட்புக் கொண்டு இருத்தலும் தீமையே.

பொழிப்பு:- தீயவரைக் காண்பதும், அவர் பேச்சைக் கேட்பதும், அவர் குணங்களைப் பேசுவதும், அவரோடு கூடி வாழ்வதும் தீமையே யாகும்.

⁂ ⁂ ⁂

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:- நெற் பயிருக்கு இறைக்கப்பட்ட தண்ணீரானது வாய்க்கால் வழியாகப் போய், அவ்வழியிடத்துள்ள புல்லுக்கும் கசிந்து போய்ச் சேரும். அது போல பழமையான இவ்வுலகத்தில் நல்லவர் ஒருவராயினும் இருப்பரேல், அவர் ஒருவரின் காரணமாகப் பெய்கிற மழையானது உலகிலுள்ள எல்லாருக்கும் பயன்படுகிறது.

பொழிப்பு:- நல்லவர் ஒருவர் இருப்பதால், அவராலே எல்லாரும் நன்மையடைவார்கள்.

குறிப்பு:- பொசியும் - கசிந்து சேரும். தொல்-பழைய ஏ: தோற்றப் பொருட்டு, தொல்லுலகில் 'நல்லார் ஒருவர் உளரேல்; அவர் பொருட்டு - பெய்யும் மழை- எல்லார்க்கும் - ஆம்' எனக் கொண்டு கூட்டியுரைக்க.

⁂ ⁂ ⁂

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் — கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

இதன் பொருள்:- முன்னே முளைப்பது அரிசியே யானாலும் உமி நீங்கிப் போனால் அவ்வரிசியானது முளைக்கமாட்டாது. அதுபோல அதிக வலிமையுடையவர்களுக்கும் இன்னொருவனுடைய உதவியில்லாமல் தாம் எடுத்துக் கொண்ட தொழிலைச் செய்து முடிக்க முடியாது.

பொழிப்பு:- மிக்க வலிமையுடையவருக்கும் துணையில்லாமல் எச் செயலையும் செய்து முடிக்க இயலாது.

குறிப்பு:- பண்டு - முன்பு; ஆற்றல் - வலிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா — கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

இதன் பொருள்:- தாழம் பூவின் மடல் அளவிற் பெரியது. ஆனால், மணத்திற் குறைந்தது. மகிழம் பூ இனிய வாசனையில் மிக்கது. ஆனால் அளவிற் சிறியது. கடல் பெரிதாக இருக்கிறது. ஆனால் அதனுடைய நீர் உடலைக் கழுவவும் பயன்படாது. அதன் பக்கத்திலேயுள்ள சிறிய ஊற்று நீரானது குடிக்கக் கூடியதான பெரும் பயனைத் தருகின்ற நீராகவும் ஆகும்.

பொழிப்பு:- உருவத்தைப் பார்த்து ஒருவரைப் பெரியவராகவும் சிறியவராகவும் மதித்தல் கூடாது.

குறிப்பு:- கந்தம் - வாசனை. சிற்றூறல் - சிறிய ஊற்று நீர்.

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ போதினிகள்

— கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு —

கொழும்பு விவேகானந்த சபையாரால்
நடாத்தப்பட்டு வரும்
அகில இலங்கைச்
சைவ சமய பாடப் பரீட்சைக்கு,
கல்விப் பகுதியினரின் பாடவிதானங்களுக்கு
அமைய எழுதப்பட்டவை.

## ..oo சைவ போதினிகள் oo..

எமது இவ்வெளியீடுகள் யாவும், பாடசாலைகளில் சைவ சமயங் கற்பிப்பதற்குப் பாட நூல்களாகக் கைக்கொள்ளுதற்கு ஏற்றவையாம்.

### வெளியீடுகளின் விலை விபரம்:-

| வகுப்பு | ரூ. சத. |
|---|---|
| 2 | 1 – 70 |
| 3 | 1 – 70 |
| 4 | 2 – 00 |
| 5 | 2 – 25 |
| 6 | அச்சில் |
| 7 | அச்சில் |
| 8 | அச்சில் |

### — சைவ சமயம் —

| | |
|---|---|
| 9 (க. பொ. த.) | 9-00 |
| நீதிநூற் கொத்து | 3-50 |

பாடசாலைகளுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும்
தகுந்த கழிவு கொடுக்கப்படும்

விபரங்களுக்குச் சபையின் புத்தகசாலை அதிபருடன்
தொடர்பு கொள்ளவும்.

விவேகானந்த சபை
34, விவேகானந்த மேடு, கொழும்பு-13,
தொலைபேசி: 22676

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org